Registered as a news paper.

இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

பாடசாலை மாணவர்களுக்கான DSI சப்பாத்துக்கள் (SHOES) ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்

DSI பாதணிகளின்

யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

SUPER SHOES

சுப்ப சூஸ்

இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-468)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 08 (12.01.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 103

## மேஜர் சோதியா நினைவு நிகழ்வில் தேசியத் தலைவர் பிரபா பங்கேற்பு

மேஜர் சோதியா படையணியின் 7 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், விடுதலைப்புலிகளின் பெண்கள் படையணியின் முதலாவது தளபதியான மேஜர் சோதியாவின் 13 ஆவது ஆண்டு நினைவு நாளும் நேற்று நடைபெற்றது.

வன்னிப்பகுதியில் பிரத்தியேகமான இடத்தில் நடந்த இது சம்பந்தமான நிகழ்வில் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் கலந்துகொண்டார்.

இந் நிகழ்வில்- மேஜர் சோதியாவின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடரை சோதியாவின் தந்தை ஏற்றி வைத்தார். மலர் மாலையை சோதியாவின் தாயார் திருவுருவப் படத்திற்கு அணிவித்தார்.

இந் நிகழ்வில் விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளும் கலந்து கொண்டனர்.

## ஒலரா ஒட்டுணு பெப்ரவரியில் இலங்கைக்கு வருகின்றார்!

(கொழும்பு)

போரில் பாதிப்படையும் சிறுவர்கள் தொடர்பான ஐ.நா ஆணையகத்தின் விசேட பணிப்பாளர் ஒலரா ஒட்டுணு பெப்ரவரி இரண்டாம் வாரத்தில் கொழும்பு வரவுள்ளார்.

இவர் - கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, அங்கு விடுதலைப்புலிகளின் தலைவரைச் சந்திக்கலாமென கொழும்பிலுள்ள ஐ.நா வட்டாரங்கள் தெரிவித்தன.

யுனிசெவ் அமைப்பின் தலைவர் கரோல் பெலமியும் இம்மாத இறுதியினுள் கொழும்பு வரவிருப்பதாக தெரியவருகின்றது.

இது இவ்வாறிருக்க - கொழும்பு வரவுள்ள ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான், யாழ்ப்பாணத்திற்கு செல்வார் என்று அவரது நிகழ்ச்சித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் நோர்வே சமாதானப்பணி தொடரும்

## அந்நாட்டுப் பிரதமர் அறிவிப்பு

(ஒஸ்லோ)

**எத்தகைய குற்றச்சாட்டுக்கள் எம்மீது தொடுக்கப்பட்டாலும் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நோர்வே தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என நோர்வே பிரதமர் பொன்டவிக் தெரிவித்துள்ளார்.**

விடுதலைப்புலிகளுக்கு வானொலிக்கருவிகள் வழங்கியமை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் நோர்வே பிரதமருக்கு தனது ஆட்சேபனையைத் தெரிவித்து கடிதம் அனுப்பியிருந்தார். இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிவைத்த பதில் கடிதத்திலேயே நோர்வே பிரதமர் மேற்கண்ட கருத்தினை வெளியிட்டுள்ளார்.

நோர்வேக்கு எதிராக - பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் ஜே.வி.பியினரும் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதும், நோர்வேயை சமாதான முயற்சியிலிருந்து வெளியேறுமாறு கோரிவருவதும் தெரிந்ததே.

## தமிழக கல்விச் சான்றிதழ் மூலம் இங்கு உயர் கல்விக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் கல்விகற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி, இலங்கையிலும் உயர் கல்வியைத் தொடர்வதற்கு அரசு அங்கீகாரம் வழங்கவுள்ளது.

தமிழகத்தின் நலன்புரிநிலையங்களில் தங்கியிருந்து கல்வி கற்ற இலங்கைத் தமிழ் மாணவர்களின் நலன் கருதி, தமிழக கல்விச்சான்றிதழ்களை தொழில்வாய்ப்பு மற்றும் உயர்கல்விக்காக இலங்கையிலும் அங்கீகாரம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, வடக்கின் புனர்வாழ்வு மற்றும் மீள்குடிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணைந்த 14 பேர் நேற்று பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யர்ழ்பாணம்)

சுய விருப்பின் பேரில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்த 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களையும், சுய விருப்பின்பேரில் வீடு செல்ல விரும்பியவர்களையும்- அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று யாழ். அரசியற்துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

காலை 11 மணியளவில் இடம் பெற்ற இந்நிகழ்விற்கு யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப்பெறுப்பாளர் கலைவிழி தலைமை தாங்கினார். இதன் போது பதினெட்டு வயதிற்கு குறைந்த பன்னிரெண்டு சிறுவர்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குடியேற்ற திட்ட வரைபுக் குழுவில் புலித்தேவன், ஜோய் மகேஸ்வரன்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயுள்ள படையினர் தங்கியுள்ள இடங்களில், மக்களை மீளக்குடியமர்த்தும் திட்டத்தை வரையும் பொறுப்பிற்கான பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தாய்லாந்தில் நகொன்பத்தமில் நடைபெற்ற பேச்சுக்களில் இதற்கான பிரதிநிதிகள் நியமனமாகினர்.

அரசாங்கத் தரப்பில்- பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பேனாட் குணதிலக ஆகியோரும், விடுதலைப் புலிகளின் தரப்பில்- புலிகளின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் ஜோய் மகேஸ்வரனும் இவ்விடயம் தொடர்பான முதற் திட்ட வரைபைபொன்றைத் தயாரிக்கும்படி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 பாதை மூடப்பட்டிருக்கும்

கண்டி வீதியில் முகமாலை மற்றும் ஓமந்தையூடான போக்குவரத்துக்கள் இன்று நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சோதனைச் சாவடிகள் இன்று வழமைபோல் மூடப்பட்டிருக்கும் .

## மனித எலும்புக் கூடு ஊர்காவற்றுறையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பருத்தியடைப்புப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள், காணியில் குழிவெட்டியபோது மனித எலும்புக்கூட்டுத் துண்டங்கள் கண்டெடுக்கப்பட்டன.

பருத்தியடைப்பு கரையோரப்பகுதியை அண்டிய மீனவர் குடியிருப்புப்பகுதியில், இடம்பெயர்ந்த குடும்பமொன்று மீளக்குடியமரவந்த வேளை- அங்கு மண் அகழ்வதற்காக குழி வெடடியபோதே எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு கொடுத்த தகவலை அடுத்து, நேற்று ஊர்காவற்றுறை நீதிவான பாலசுப்பிரமணியம், சட்டவைத்திய அதிகாரி எஸ்.வி.ஸ்ரீஇராஜேஸ்வரன் ஆகியோர் அப்பகுதிக்குச் சென்றனர்.

இப்பகுதியில் முன்னர் வைத்தியசாலை ஒன்று அமைந்திருந்ததாகவும், அது இயங்காததை அடுத்து அப்பகுதி அரச காணியில் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டதாகவும் விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



யாழ்ப்பாணத்தில தோண்டத் தோண்ட கிடைக்கிற செல்வம் இப்ப இதுதானாச்சு...

## குடாநாட்டு வைரஸ் காய்ச்சல் தீவிரமானது ,ஆபத்தானது

### சுகாதார அமைச்சின் வைத்திய நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நோய்த்தொற்றுக்கள் ஆபத்தானதும் தீவிரமானதுமாகும் என சுகாதார அமைச்சின் வைத்திய நிபுணர் ரி.ஏ. குணதிலக தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள வைரஸ் தொற்று மிகவும் ஆபத்தானது. இதற்குச் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள குறைபாடுகளும், தற்போதைய காலநிலையுமே காரணங்களாகும்.

குடாநாட்டில் சனநெருக்கடிமிக்க நகரப்புறங்களில் ஏற்பட்ட திடீர் சனப்பெருக்கமும், சுகாதார உட்கட்டமைப்புச் சீரழிவுக்குக் காரணமாகியுள்ளது.

அத்துடன், கவனிப்பாரற்ற நிலையில் இருக்கும் சுகாதார நிலை, மக்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வைரஸ் காய்ச்சலில் மேலும் இருவர் மரணம்

(வண்ணை)

யாழ் குடாநாட்டை கலக்கும் வைரஸ் காய்ச்சலின் தாக்கத்திற்கு உள்ளாகிய மேலும் இருவர், சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மேலதிக அமெரிக்கத் துருப்புகள் வளைகுடா நோக்கிச் செல்லும்!

(வொஷிங்ரன்)


மத்திய கிழக்கில் உள்ள தனது படைப்பலத்தை அதிகரிக்கும் பொருட்டு மேலும், முப்பதாயிரம் மேலதிகப் படைகளை அனுப்பவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இதற்கான உத்தரவில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்வீல்ட் கையெழுத்திட்டுள்ளார்.



வளைகுடா செல்லும் படைகள்

இப்படைகளில் ஆரம்பக்கட்டத் தாக்குதலை நடத்துவதற்காக கடற்படையின் தரைப்படைப் பிரிவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இப்படைகள் மூன்று கப்பல்களில் வளைகுடாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவர்களோடு சேர்த்து வளைகுடாவில் அமெரிக்கப் படைகளின் தொகை 1,20,000 ஆகின்றது.

இதேவேளை - பிரிட்டிஷ் விமானந்தாங்கிக் கப்பலான 'ஆர்க்ரோயல்' வளைகுடா நோக்கி புறப்பட ஆயத்தமாகியுள்ளது. பிரிட்டிஷ் விசேட அதிரடிப்படையினர் ஈராக் மீதான கடல்வழி மூலமான அமெரிக்காவின் தாக்குதலுக்கு உதவுவர் என பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. துருக்கி தனது விமானத்தளங்கள், துறைமுகங்கள்



அமெரிக்க மருத்துவக் கப்பல்

என்பவற்றை அமெரிக்கப்படைகள் பயன்படுத்த அனுமதியளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 14 குழந்தைத் தொழிலாளர்கள் நேபாளப் பொலிஸாரால் மீட்பு!



நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நெசவுத் தொழிற்சாலையில் வேலை செய்த பதின்நான்கு சிறுவர்களை நேபாளியப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நூல் நெய்யும் தொழிலை இச்சிறுவர்கள் செய்துவந்துள்ளனர் கடுங்குளிரான இருட்டறைக்குள் வைத்து இரகசியமான முறையில் இவர்கள் வேலை வாங்கப்பட்டனர். எனத் தெரியவருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த நெசவுத் தொழிற்சாலையை முற்றுகையிட்ட பொலிஸார் அப்பதின் நான்கு சிறுவர்களையும் மீட்டெடுத்து சிறுவர் புனர்வாழ்வு நிலையத்தில் ஒப்படைந்துள்ளனர்.

காத்மண்டுவில் இயங்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையப் பொறுப்பதிகாரி தகவல் தருகையில், இவ்வாறான குழந்தைத் தொழிலாளர்கள்தான் பின்னர் மாவோப் போராளிகளாக மாறுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியதால், நெசவுத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்குத் தொடர வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# அல்கெய்டா சந்தேகநபர்கள் ஜெர்மனிய பொலிஸாரால் கைது

ஜெர்மனியப் பொலிஸார், அல்-கெய்டா அமைப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் இரு யேமன் நாட்டுப்பிரஜைகளைக் கைது செய்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை பிராங்:.பொட் சர்வதேச விமானநிலையத்தின் ஹோட்டலில் தங்கியிருந்தபோதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிராங்:.பொட் சர்வதேச விமானநிலையம்



மேற்படி இரு சந்தேக நபர்களையும் கைது செய்யுமாறு அமெரிக்க அரசாங்கம் ஜெர்மனிய அரசை கேட்டுக் கொண்டது. 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்கத் தாக்குதலின் பின்னர், ஜெர்மனிய புலனாய்வுத்துறையினர் விழிப்புடனேயே இருப்பதாக அந்நாட்டுப் புலனாய்வுத்துறைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். குறிப்பாக, பிராங்:.பொட் விமானநிலையம்- மத்திய கிழக்கு, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்கான பிரதான தரிப்பு நிலையமாகக் காணப்படுவதால் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

**காங்கேசன்துறை/பருத்தித்துறை துறைமுகங்களில் இருந்து பொருட்களை லொறி மூலம் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளிற்கு ஏற்றிச் (காவி) செல்வதற்கான**

## கேள்வி கோரல் - 2003

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களை லொறிமூலம் காங்கேசன்துறை / பருத்தித்துறை துறைமுகங்களிலிருந்து பின்வரும் இடங்களில் உள்ள உணவுக்களஞ்சியங்களிற்கு ஏற்றிச் (காவி) செல்வதற்கு ஒரு நாளில் குறைந்தது 60 லொறிகளை சேவைக்கு வழங்கக்கூடியவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஏற்றும் இடம் | இறக்கும் இடம் |
| --- | --- |
| காங்கேசன்துறை துறைமுகம்/ பருத்தித்துறை துறைமுகம் | காங்கேசன்துறைக் களஞ்சியம் |
| | புலோலி உணவுக்களஞ்சியம் |
| | நாவற்குழி உணவுக்களஞ்சியம் |
| | கோண்டாவில் உணவுக்களஞ்சியம் |
| | கொக்குவில் உணவுக்களஞ்சியம் |
| | ஊர்காவற்றுறை உணவுக்களஞ்சியம் |

மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக கணக்காளரிடம் செலுத்தி, கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கௌ்ள முடியும்.

கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள்முறி - Bid Bond) ரூபா 25,000.00 ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக கணக்காளரிடம் செலுத்தி (அரசாங்க கேள்வி நடைமுறை வழிகாட்டி அத்தியாயம் IV பந்தி 46:7 இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களிற்கு பொருந்தாது) பணப்பற்றுச் சீட்டினை (பொது 172) பெற்று, அதன் புகைப்படப்பிரதியை கேள்விப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமோ கணக்காளரது அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.01.27 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாகச் சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'காங்கேசன்துறை/ பருத்தித்துறை துறைமுகங்களிலிருந்து பொருட்களை லொறி மூலம் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளிற்கு ஏற்றிச்செல்வதற்கான கேள்வி' என எழுதப்படவேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.

2003.01.13 ஆம் திகதி தொடக்கம் 2003.01.24 ஆம் வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 வரை கேள்விப்படிவங்களையும், ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

மேலதிக தகவல்கள் தேவைப்படின் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகக் கணக்காளர்/உதவித்திட்டப் பணிப்பாளர் (நிவாரணம்) ஆகியோரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சேவை தேவைப்படும்போது உடனடியாக ஒரு (01) நாளில் 60 லொறிகளை சேவையில் ஈடுபடுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சேவையில் ஈடுபடுத்தப்பட்ட திகதியில் இருந்து நான்கு (04) வாரகாலத்திற்குள் கொடுப்பனவு காசோலை மூலம் செய்யப்படும்.

செ.பத்மநாதன்
*தலைவர்/அரச அதிபர்,*
*மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.* (சி/470)


## உலகவலம்

### வடகொரியா மிரட்டல்

தனது ஏவுகணைப் பரிசோதனைத் தடைத் திட்டத்தைக் கைவிடப் போவதாக வடகொரியா எச்சரித்துள்ளது. சீனாவுக்கான வடகொரியத் தூதுவர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், எமது இந்த முடிவுக்கு அமெரிக்காவே காரணம் எனக் குற்றஞ்சாட்டியுள்ளார். வடகொரியாவின் இவ்வறிவிப்புக்கு தென்கொரியாவில் கடும் ஆட்சேபம் கிளப்பப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இத்தாலி வெஸ்பா விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- உருத்திரமூர்த்தி, சுதுமலை தெற்கு, மதவடி. (சி-471)

### தேவை

உடைகளுக்கு பில் எழுதவும், கொடுக்கவும், உடைகள் சிட்டையுடன் (பில்) சரிபார்த்துக் கொடுக்கவும் ஒரு ஆள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். உடன் தொடர்புகொள்ளவும். முகவரி:- நாதன் சலவைத் தொழிலகம், கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (097)

### பல் கட்டுதல்

பல் கட்டுதல், பல் கிளிப்போடுதல் நல்ல முறையில் நியாயமான விலையில் மேற்கொள்ளவும், கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளை பெறவும் முடியும். (மொறாயஸ்), ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம், இல.05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி-439)

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சூர்யா, லைலா, சினேகா நடித்த
உன்னை நினைத்து
10.01.2003 முதல் வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 மட்டும் SPIDER MAN
(சி/397)

ராஜா யாழ்ப்பாணம்.



முரளி, ராதிகா
சௌத்திரி,
வடிவேல், மணிவண்ணன்
சுந்தரா டிராவல்ஸ்
10.30, 2.30, 6.00
15 முதல்
விஜய், ஸ்நேகா
வசீகரா
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்து கொள்ளவும்.
(சி-398)

## கலட்டி அம்மன் தேவஸ்தானம் சப்பறம் செய்தல்

யாழ். வண்.கிழக்கு கலட்டி எச்சாட்டி ஸ்ரீ மஹாமாரி அம்மனுக்குச் சப்பறம் ஒன்று செய்ய திருவருள் கூடியுள்ளது. செய்வதில் வல்ல ஆசாரிமார், 17.01.2003 வெள்ளி காலை 10 மணிக்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

[சி-469] - தேவஸ்தானத்தினர்.


## இன்றைய நாள் இனிய நாள்

**12-01-2003 - ஞாயிற்றுக்கிழமை**

| | |
| --- | --- |
| மேடம் | :- தேகசுகம், வெளியூர்ப் பிரயாணம், அதிக பிரயாசை, சந்தோஷம். |
| இடபம் | :- தன நாசம், பொருள் இழப்பு, மனநிம்மதி குறைவு, பணமுடை. |
| மிதுனம் | :- திரவிய லாபம், குடும்ப சுகம், பூமியால் நன்மை, நல்ல வாழ்க்கை. |
| கர்க்கடகம் | :- ஸ்திரத்தன்மை, தேகசுகக் குறைவு, விபத்து, மனப்பயம். |
| சிங்கம் | :- மனக்கவலை, வரவுக்கு மிஞ்சிய செலவு, வீண் அலைச்சல். |
| கன்னி | :- தேகசுகம், தொழில் சிறப்பு, பெரியோர் சந்திப்பு, தானதருமம் செய்தல். |

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

| | |
| --- | --- |
| துலாம் | :- காரிய தாமதம், பிரயாணத்தால் கெடுதல், காலில் காயம். |
| விருச்சிகம் | :- காரிய வெற்றி, அதிக சந்தோஷம், பெரியோர் வருகை, நல்வாழ்வு. |
| தனு | :- மந்தநிலை, வெளியூர்ப் பிரயாணம், தெய்வ வழிபாடு. |
| மகரம் | :- அதிக அலைச்சல், குடும்ப மகிழ்ச்சி, பெண்களால் நன்மை. |
| கும்பம் | :- சத்துருபீடை, தேகசுகக் குறைவு, மனக்கிலேசம். |
| மீனம் | :- தேகசுகக் குறைவு, அந்நியர் உதவி, வாகன யோகம். |

# நான்கு நாடுகளின் சமஷ்டிமுறை; ஆராய 15 பேர் குழு செல்கிறது!

(நமது நிருபர்)

சமஷ்டி முறை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு நான்கு நாடுகளுக்கு 15 பேர் கொண்ட அரச மற்றும் பல்வேறு தரப்புக்களைச் சேர்ந்தவர்களைக் கொண்ட குழுவொன்று செல்லவுள்ளது.

பெல்ஜியம், ஒஸ்ரியா, ஸ்பெயின் மற்றும் ஜேர்மனி ஆகிய நான்கு நாடுகளுக்கே இந்தக் குழு செல்லவுள்ளது. இந்நாடுகளில் உள்ள சமஷ்டி ஆட்சிமுறை தொடர்பான ஆய்வுகளைச் செய்வதற்கே இக் குழு பயணமாகவுள்ளது.

ஜேர்மனியின் 'அமைதிப் பேச்சு' (pease Talk) என்ற அரச சார்பற்ற தொண்டர் அமைப்பின் ஏற்பாட்டிலேயே இந்தப் பதினைந்து பேர் கொண்ட குழு பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

இக்குழுவில் அரசாங்கத்தரப்பில் இருந்து அமைச்சர்கள் ஜெயலத் ஜெயவர்த்தன, கபீர் காசிம் ஆகியோரும்,

பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் - சரத் அமுனுகம, ஜோன் செனவிரட்ன ஆகியோரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புச் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் எச்.எம் ஹாரிஸ், எம்.கே. தௌபிக், தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் பேரியல் அஷ்ரப், மலையகத் தமிழர் சார்பில் அமைச்சர் சந்திரசேகரன், யோகராஜன் ஆகியோரும் லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் பத்தேகம சமித்த தேரர், மற்றும் இரண்டு சிங்கள ஊடகவியலாளர்களும் இடம் பெறவுள்ளனர்.

இந்தக் குழுவில் தமிழ்ப் பிரதிநிதிகளுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை எனவும், தமிழ் ஊடகவியலாளர்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி குழு நான்கு நாடுகளிலும் சில வாரங்கள் தங்கியிருந்து அந்நாட்டு சமஷ்டி அமைப்பு முறைகள் தொடர்பாக அங்குள்ள அரச அதிகாரிகள், அரசியலமைப்பு நிபுணர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடவும், சில நிர்வாக நடைமுறைகளை நேரில் அவதானிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

## மாநகர ஊழியர் நலன்புரிச் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஒன்பதாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.(13)

## வருடாந்த பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட- இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்குச் சங்கத்தின் காரியாலயத்தில் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது. (ச,கி)

# தைப்பொங்கல் விழா கொண்டாட சந்திரிகா - ரணில் ஏட்டிக்குப் போட்டி!

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பொங்கல் விழாவைக் கொண்டாடுவதற்குப் பிரதமரும் ஜனாதிபதியும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுகின்றனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி பொங்கல் விழாவை அலரிமாளிகையில் கொண்டாடுவதற்கு வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 18 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் பொங்கல் விழாவைக் கொண்டடுவதற்கு வருமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதியும் அழைப்பு விடுத்துள்ளார்.

# 'புத்தரின் பெயரால்' திரைப்படம் திரையிடுவதை அரசு தடுக்கும்

## வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

புத்தரின் பெயரால் என்ற ஆங்கிலப்படத்தை வெளிநாடுகளில் திரையிடப்படுவதைத் தடுக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபடுமென வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ரிரோன் பெர்ணானடோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பத்தேகம சமிந்த தேரர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இத்திரைப்படத்தில் பௌத்தர்கள், இந்துக்களைக் கொல்வதான கருத்துப் பிரதிபலிப்பதாகவும், இதனால் வெளிநாடுகளில் இத்திரைப் படம் திரையிடப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் - முஸ்லிம் உறவை சீர்குலைக்க சில குழுக்கள் தொடர்ந்தும் முயற்சி

## மட்டு - அம்பாறை அரசியற்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கில் தமிழ், முஸ்லிம் உறவுகளைச் சீர்குலைக்க தொடர்ந்தும் பல சக்திகள் முனைந்து கொண்டிருப்பதாக, 'முஸ்லிம் உறவுகளின் மேலான கவனத்திற்கு', எனும் தலைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற்துறையினர் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நாங்கள் மதத்தால்தான் வேறுபட்டவர்கள், மொழியால் ஒன்றுபட்டவர்கள். தற்போது நாட்டில் நிலவுகின்ற அமைதிச் சூழலில் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவு மேலும் வலுப்படுத்தப்பட்டு வருவதுடன் - விவசாய, வர்த்தக ரீதியாகவும் இரு இன மக்களின் புரிந்துணர்வு மேலோங்கியே நிற்கின்றது.

அமைதிச் சூழ்நிலை உருவான ஒரு வருடகாலத்தில் ஆங்காங்கே சிறு சிறு குழப்பத்தினை ஏற்படுத்தி இரு இன மக்களின் இயல்பு நிலைக்குக் குந்தகம் விளைவிக்க, தற்போதைய இயல்புநிலையை விரும்பாத, கடும்போக்குடைய, இனவாதத்தினை தூண்டி வேடிக்கை பார்க்கின்ற, சுயலாபம் கொண்ட குழுக்கள் தமிழ், முஸ்லிம் மக்கள் அந்நியோன்னியமாகச் செறிந்து வாழ்கின்ற பகுதிகளில் இன்னும் செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

இந்தக் குழுக்கள் அமைதிநிலை தோன்றியதன் பின்பு, வாழைச்சேனையில் வீணான குழப்பத்தினை ஏறபடுத்தி தமிழ், முஸ்லிம் மக்களின் சொத்துக்களுக்கு நாசம் ஏற்படுத்தினாகள். ஆனால், இந்தக்குழப்பம் பாரதூரமான உயிர், உடமை, சொத்துக்களின் அழிவினை ஏற்படுத்தாமலிருக்க இருதரப்புப் புத்திஜீவிகளும் மேற்கொண்ட நடவடிக்கையால் பாதுகாக்கப்பட்டது.

இக்குழப்பத்தினை ஏற்படுத்தும் குழு அவர்களின் நடவடிக்கையினை கைவிட்டதாக இல்லை. எந்த வகையிலாவது தமிழ், முஸ்லிம் மக்களின் நல்லுறவிற்கும், நாட்டில் நிலவுகின்ற அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் தங்களின் செயல்களைச் செய்து கொண்டே இருக்கின்றார்கள்.

அந்தவகையில், கடந்த 5ஆம் திகதி ஓட்டமாவடியைச் சேர்ந்த முஸ்லிம் நபருக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்திச்சென்று, தமிழ்க் கிராமமான கல்மடு எனும் இடத்தில் சாரதியை வெட்டிக் கொலை செய்துள்ளனர். இச்சம்பவத்தினை தமிழ் மக்கள் செய்ததாகவே முஸ்லிம் மக்களிடையே ஒரு மாயையைத் தோற்றுவித்துள்ளனர்.

அன்புக்குரிய உறவுகளே, இரு இனங்களுக்கிடையேயும் குழப்பத்தினை ஏற்படுத்துபவர்களை இனங்காணுங்கள். இவர்களின் செயல்களுக்கு துணை போகாமல் காலம் காலமாகத் தமிழ், முஸ்லிம் மக்களிடையே உள்ள உறவினை வலுப்படுத்துங்கள். விடுதலைப் புலிகளாகிய நாங்கள் இக்கொலையினைச் செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். தமிழ், முஸ்லிம் ஒற்றுமையினைப் பேணுவோம், நாட்டிலுள்ள அமைதி நிலைக்கு வலுச்சேர்ப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்.வந்துள்ள ஜேர்மன் நாடகக் குழுவினருடன் வன்னியிலிருந்து வந்த நாடகக் குழுவினர். (படம்: ராஜ்குமார்).

## தமிழீழத் தேசியக் கொடி, தேசியகீதம்;

# அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என பிரட்மன் கூறியதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழத் தேசியக்கொடி, தேசிய கீதம் என்பனவற்றை ஏற்றுக்கொள்ளவுள்ளதாக ஐரோப்பிய விஜயத்தின்போது பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்திருப்பதாக ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக முறையிட்டுள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கேள்வி நேரத்தை ஒதுக்குவதற்கான ஒழுங்குகளைச் செய்துதருமாறும் பிரத மர் ரணில் விக்கிரமசிங்கவை ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுள்ளனர். (01)

## வைரஸ் காய்ச்சலின் நிலையை ஆராய

# சுகாதார அமைச்சு உயர் அதிகாரிகள் அடுத்தவாரம் யாழ்ப்பாணம் வருவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பரவிவரும் வைரஸ் காய்ச்சலினை கட்டுப்படுத்துவது தொடர்பாக நிலைமையை ஆராய்வதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் ரெஜி பெரேரா தலைமையிலான உயரதிகாரிகள் குழு அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

குடாநாட்டில் கடந்த இரு மாதங்களாகப் பரவிவரும் வைரஸ் காய்ச்சலினால் நூற்றுக்கணக்கானோர் தினமும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், உயிரிழப்புக்களும் ஏற்பட்டுவருகின்றன.

இந்தநிலையில் வைரஸ் காய்ச்சல் பரவிவரும் காரணங்களைக் கண்டறிவதற்காகவும், தடுப்பு நடவடிக்கைகளை ஆராய்வதற்காகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் கலாநிதி ரெஜி பெரேரா, மலேரியா தடை இயக்கத்தின் பணிப்பாளர் டாக்டர் பெர்ணான்டோ மற்றும் உயரதிகாரிகள் இங்கு வருகை தரவுள்ளனர்.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்குவரும் இவர்கள்-கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் சுகாதார திணைக்கள அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரைச் சந்தித்து இங்கு பரவிவரும் வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுததுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவுள்ளனர்.

இந்த அதிகாரிகள் - 16, 17, 18 ஆம் திகதிகளில் இங்கு வரலாம் எனச் சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார். (ச,கி)

# இலங்கை அகதிகள் விரும்பினால் தாய்நாடு திரும்பிச் செல்லலாம்!

## இந்திய உள்துறை இணை அமைச்சர் கூறுகிறார்

(புதுடெல்லி)

இந்தியாவில் அகதிகளாகத் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் மீண்டும் தாயகம் திரும்பவிரும்பினால், திரும்பிச் செல்லலாம் என்று இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் வித்தியா சாகர் ராவ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தங்கியுள்ள அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக இந்திய அரசாங்கத்திடம் இதுவரை எந்தத் திட்டமும் கிடையாது. அதைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஆனால், இலங்கை அகதிகள் தாமாக நாடு திரும்பவிரும்பினால் அதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும். இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாகச் சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களுடன் இந்திய அரசு கலந்தாலோசனை செய்யவேண்டியிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழகத்திலுள்ள அகதிமுகாம்களிலும், வெளியிலுமாக ஆயிரக்கணக்கான இலங்கை அகதிகள் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீளக் குடியமர்வு தொடர்பாக

# அரசாங்கம் நல்ல முடிவு தராவிட்டால் குடாநாடு தழுவிய போராட்டங்கள்!

### பிரதமருக்கு வலி - வடக்கு ஒன்றியம் கடிதம்

நான்காவது சுற்றுப்பேச்சுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய மீள்குடியமர்வு தொடர்பாக அரசாங்கம் நல்ல முடிவை எடுக்க வேண்டும். இல்லையேல் குடாநாட்டை ஸ்தம்பிதமடையச் செய்யும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என, வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்றுமுன்தினம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் முழுவிபரம் வருமாறு:

தமிழீழ மக்கள் மீது திணிக்கப்பட்ட போரினால் - இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் உயிர்க்காப்பிற்காக தாம் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டும், உடமைகள், உறவுகள் அனைத்தையும் பிரிந்து பிற மாவட்டங்களிலும், பிறர் வீடுகளிலும், அகதி முகாம்களிலும் வாழ்ந்து கொண்டிருப்பது தாங்கள் அறிந்ததே.

இந்தக் கொடிய போரினாலும் பொருண்மியத் தடைகளினாலும், சுகாதாரம், போக்குவரத்து, கல்விச் சீர்கேட்டினாலும் நாம் தொடர்ந்து ஒரு துன்பமான வாழ்க்கையினை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக நடந்த இந்தப் போர், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகப் பேச்சளவிலும், அறிக்கை வாயிலாகவும் தினம் தினம் செய்திகள் வெளியாகிய போதிலும்கூட, எமது மக்களின் வாழ்வியலில் சுமுகநிலை தோன்றவில்லை.

மாறாகத் துன்பமும் துயரமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. சொந்த வாழ்விடங்களை வாழ முடியாமலும், சொந்த மண்ணில் விவசாயம் செய்ய முடியாமலும், கடலில் மீன்பிடிக்கமுடியாமலும், எமது பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகளை இயங்கவைக்க முடியாமலும், வழிபாட்டுத்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்ய முடியாமலும், சீரான கல்வி, வேலை வாய்ப்புக்களை இழந்து அகதிமுகாம்களில் அவலப்படுகின்றோம்.

இது மனித உரிமை மீறலின் அதியுச்சமான கொடூரமாகும். இதனை அரசும், சர்வதேசமும் இதுவரை உணரவில்லை என்பதையிட்டு மிகுந்த வேதனையடைகின்றோம். எமது சொந்தக் கால்களில், சொந்த உழைப்புக்களில், சொந்த உறவின் மத்தியில் வாழமுடியாத நிலையில் நின்றுகொண்டு, சுமுகமான வாழ்வை மீளப்பெறுவதற்காக இப்போராட்டத்தை ஆரம்பித்தோம்.

வெயிலின் கொடுமையையும், பருவமழையின் சீற்றத்தையும், எமது நாளாந்தக் கடமைகளையும் புறந்தள்ளிவிட்டு - எமது வாழும் உரிமையையும் வேண்டி இப்போராட்டத்தை ஆரம்பித்தோம். அரசோ, அரச அதிகாரிகளோ எமது விடயத்தில் பாராமுகமாக இருந்ததும், இருப்பதும் மிகவும் வேதனைக்குரியது.

அண்மையில் விடுதலைப்புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெற்ற நாலாம் சுற்றுப்பேச்சில் எட்டப்பட்ட தீர்வில் மீள்குடியமர்வு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக எமக்கு நல்ல முடிவும், விடிவும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாம் மேற்கொண்ட உண்ணாவிரத மறியற் போராட்டத்தினைத் தற்காலிகமாக இடைநிறுத்தி, நல்லதோர் தீர்வை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

தவறும்பட்சத்தில் -

குடாநாடு தழுவிய போராட்டங்களை அரச, அரசசார்பற்ற, ஏனைய பொது நிறுவனங்கள் ஸ்தம்பிதம் அடையும் அளவிற்கு எமது போராட்டம் விஸ்தரிக்கப்படும் என்பதனைக் கவலையுடன் அறியத்தருகின்றோம்.

(68)

## வெட்டுப்புள்ளியால் பாதிப்புற்ற மாணவர் கலந்துரையாடல்

2002/2003 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட கணித, விஞ்ஞான, வர்த்தக மற்றும் கலைப்பிரிவு மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் - இன்று பி.ப. 3 மணிக்குப் புதிய விஞ்ஞானக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கை சம்பந்தமாக ஆராய இருப்பதால், அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர் அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார்.

## பதவி நிலைகளை உறுதிப்படுத்த அறிவுறுத்து

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி அலுவலகங்களிலுள்ள அனைத்துப் பதவிகளிலுமுள்ள உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் பதவி நிலைகளை உடனடியாக உறுதிப்படுத்தி அனுப்பிவைக்கும்படி உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டுள்ளார். (100)

# குடாநாட்டில் துரித நீர்விநியோகம் புள்ளிவிபரத் தரவுகள் சேகரிப்பு

(மானிப்பாய்)

யாழ்.மாவட்டத்தில் துரித நீர் விநியோகத்திட்டங்களை மேற்கொள்வதற்கான முன்னோடி ஏற்பாடாக, அவற்றுக்குரிய புள்ளிவிபரத் தரவுகள் சேகரித்து அனுப்பும்படி வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா, யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியைக் கேட்டுள்ளார்.

இதன்படி - வரைபடங்கள் தயாரித்து அளித்தலுடன், அவற்றைக் கணனியில் பதிவுசெய்து குறுவட்டில் எடுத்தல், தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல், தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கைக்கான அங்கீகாரத்தினை பிரதேச செயலரிடம் பெறுதல், அரசாங்க அதிபரிடம், பெற்ற திட்ட அறிக்கையை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்தல் போன்ற விடயங்களை -

அவ்வவ் பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தயாரித்து தமக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

(100)

### வசதிகுறைந்த மாணவர் நலன்கருதி

# மீண்டும் இரவுநேர படிப்பகங்கள் அடுத்தமாதம் முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் இரவு நேரப் படிப்பகங்கள் மீண்டும் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை வலயக் கல்வித் திணைக்களம் மேற்கொணடு வருவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கல்வியில் பின்னடைவான மாணவர்கள் தங்கியிருக்கும் கிராமங்கள் இனங்காணப்பட்டு, இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது.

கிராமங்களிலுள்ள பொது இடங்கள் தெரிவு செய்யப்பட்டு கல்வியலாளர்கள், சமூக சேவையாளர்களின் உதவியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை நடைபெறவுள்ள இப் படிப்பகத்தில் - மாணவர்கள் சுலபமாகப் படிப்பதற்கும், அவர்களுக்கு பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை நீக்குவதற்கும் விசேட வகுப்புக்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுவருகின்றது.

இத்திட்டம் கடந்த அறு வருடங்களுக்கு முன்னர் குடாநாட்டிலுள்ள கிராமங்களில் நடாத்தப்பட்டு வந்தபோதிலும், குடாநாடு படையினருடைய கட்டுப்பாட்டிற்குள் வந்ததை அடுத்து ஏற்பட்டிருந்த ஸ்திரமற்ற நிலையினால் அது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

## திறந்த பல்கலைக்கழக டிப்ளோமா விண்ணப்பப்படிவம்

(மானிப்பாய்)

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறியினை மேற்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் கொழும்பிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்விண்ணப்பப்படிவங்கள் 150 மட்டுமே வந்துள்ளன எனவும், 300 ரூபாவினைச் செலுத்திப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாமெனத் திறந்த பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (100)

# பார ஊர்திச் சங்க விவகாரம் அரச அதிபருக்கு மகஜர்

யாழ்.மாவட்ட தனியார் பார ஊர்திச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பார ஊர்திகளைத் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அனுமதிக்கக்கோரி, யாழ்.செயலகத் தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் வே.வீரகத்திப்பிள்ளையிடம் நேற்றுமுன்தினம் மேற்படி சங்கத்தினரால் மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் கலந்து கொண்டார்.

சங்கத் தலைவர் இ.அரிகரன் இது தொடர்பாகக் கருத்துக் கூறும் போது, தமது கோரிக்கைக்குச் சாதகமான பதில் தராதுவிட்டால், யாழ். செயலகம் முன்பாகப் போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்தார்.(கி.ச)

## கிணற்றில் வீழ்ந்து வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் நீர் எடுப்பதற்காகச் சென்ற முதியவர் தவறி வீழ்ந்து மரணமடைந்தார்.

பண்டத்தரிப்பு பனிப்புலத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில், முருகேசு விருத்தாசலம் (வயது 77) என்பவரே கிணற்றில் வீழ்ந்து பரிதாபகரமாக மரணமானவர் ஆவார். இச்சம்பவம் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

இறந்தவரின் சடலம் இளவாலைப் பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு, விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ச,கி)

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்.



பெயர் : மு.கஜார்த்தனி
முகவரி : 83/16 அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

எட்டாவது அகவையில்.



பெயர் : ர.விதுஷா
முகவரி : வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி,(கனடா).

எட்டாவது அகவையில்.



பெயர் : ஸ்ரீ.கீர்த்திகா
முகவரி : சந்திரபுரம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

ஒன்பதாவது அகவையில்.



பெயர் : பே.ஜதுர்ஸ்சனன்
முகவரி : 16/5, சீனியர் லேன், தட்டா தெரு, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------


முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

# விளையாட்டு அரங்கம்


பிரதீவ்குமார்

# திட்டமிட்ட இலக்குடன் வெற்றி நோக்கி....!

**2002**இல் நடைபெற்ற களுத்துறை சமாதான விளையாட்டு விழா யாழ்.மாவட்டத்தின் பல விளையாட்டு வீரர்களின் திறமைகளைப் பளிச்சிடவைத்த அதேவேளை, அவர்களை எம்மக்களும் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தது. இந்த வரிசையில் நாம் சந்தித்தவர் மாணிக்கவாசகர் பிரதீவ்குமார். இவர் குண்டெறிதல் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றவர்.

76.07.09 இல் பிறந்த இவர், தென்மராட்சியின் மட்டுவில் கிராமத்தைச் சேர்ந்தவர். தனது கல்வியைச் சந்திரபுரம் ஸ்கந்தவரோதயா வித்தியாலயத்தில் (மட்டுவில் ம.வித்தியாலயம்) பெற்றுக்கொண்டவர். பாடசாலை மட்டத்தில் விளையாட்டு நிகழ்வுகளில் எல்லாம் கலந்துகொண்டு பரிசில்களைப் பெற்றவர். ஆனால், இவர் தெரிவுசெய்துகொண்ட துறை ஆரம்பத்தில் கரப்பந்தாட்டம். இவர் தனது விளையாட்டு அனுபவங்கள் பற்றிக் கூறுகையில் - மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட அணியின் வீரனாகத் தன் விளையாட்டுத்துறை ஆரம்பமாகியதை நினைவுகூர்கின்றார். மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தில், தான் பெற்ற பயிற்சியின் பலனாக 1997இல் யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்ட அணியில் அங்கம் வகிக்கச் சந்தர்ப்பம் பெற்ற அவர், அதனைத் தொடர்ந்து வந்த காலம் தென்மராட்சிப் பிரதேசத்தில் விளையாட்டுக்களைத் தொடர வாய்ப்பற்ற பதட்டமான சூழ்நிலை காணப்பட்டதைச் சுட்டிக் காட்டுகிறார். இதே வேளை, மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவராக இருந்தபோது தான் இராசதுரை (சிட்டு அண்ணை) மூலம் முறைப்படியான பயிற்சிகளைப் பெற்றதையும் கூறுகிறார்.

கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்ட நீங்கள் எவ்வாறு சற்றும் இணைத்துப்பார்க்க இயலாத குண்டெறிதல் துறைக்கு வந்தீர்கள் என்றபோது "உடற்பயிற்சி டிப்ளோமாத்துறைக்கு நான் தெரிவு செய்யப்பட்டபோது அங்கு விரிவுரையாளர் நாகமணிதான் எனக்குப் பொருத்தமான துறை குண்டெறிதல்" என்று எடுத்துக்காட்டியவர். அதன்பின் ரமணன் சிறந்த பயிற்சிகளை எனக்களித்தார். இதே வேளை, இத்துறையில் பல நுணுக்கங்களையும், ஆலோசனைகளையும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் செபமாலைமூர்த்தியும் வழங்கினார்" என்பவர், பல்கலைக்கழகத்தில் சில இக்கட்டான சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போது விளையாட்டுத்துறை அலகின் பணிப்பாளர் கணேசதாசன் பயிற்சிக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்ததையும், வலுவூட்டல் பயிற்சிக்கு இளம்பிறை உதவி செய்ததையும், பயிற்சி வழங்கியதையும் தொட்டுச்செல்கின்றார்.

இவர் விளையாட்டுத்துறையின் பொதுவான வளர்ச்சி பற்றிப் பேசுகிறார். திறமை மிகுந்த வீரர்களை உருவாக்கும் சரியான நாற்றுமேடை பாடசாலைகள் தான் என்று திடமாக நம்பும் இவர், அதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியம் பற்றிப் பேசுகிறார். சில காலத்துக்கு முன்னும் யாழ். வீரர்களின் உச்ச இலக்கு மாவட்டமட்டப் போட்டியில் முதலிடம் என்பதாகத்தான் இருந்தது. சூழ்நிலை அப்படி. ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது. இனி இலங்கை மட்டம் என்ற இலக்கை வைத்தே எல்லோரும் செயற்பட வேண்டும். சரியான துறையை 14,15 வயதிலேயே இனங்கண்டு, தெரிவு செய்து பயிற்சி பெறவேண்டும். அதோடு வேறு விளையாட்டுக்களில் ஈடுபடும்போது பிரதானதுறைக்கு ஊறு ஏற்படாத வகையில் தம் உடலையும் காத்துக்கொள்ளவேண்டும். மேலும் சந்தர்ப்பங்கள் வாய்க்கும் போதெல்லாம், யாழ்ப்பாணத்துக்கு வெளியே வீரர்கள் சென்று வரவேண்டும். அப்போதுதான் பிரமைகள் உடையும், தன்னம்பிக்கை ஏற்படும் என்கிறார்.

சரியான திட்டமிட்ட பயிற்சிகள் நடைபெறவேண்டும். அதற்கு யாழ்ப்பாணத்தில் நிறுவன ரீதியாக சந்தர்ப்பங்கள் குறைவாக இருப்பதைச் சுட்டிக்காட்டும் அவர், இவை நன்கமையின் யாழ்.வீரர்கள் தேசியமட்டத்தில் பதக்கங்கள் பெறுவது இலகுவானதென்கிறார் தன்னம்பிக்கையுடன்.

படிமுறையான வளர்ச்சிக்குப் பெருந்துணை சேர்ப்பது வலுவூட்டல் பயிற்சி என்கிறார். ஏனெனில், சக்தியைச் சேமித்து வைக்க இதுவே சரியான படிமுறை என்னும் இவர், இதுவே களத்தில் போட்டியின் முழு வீச்சையும் காட்ட உதவும் என்றும் கூறுகிறார். மேலும், இன்றைய உலக விளையாட்டுத்துறை தொழில்சார் துறையாக மாறிவிட்டது என்பவர், எமது மண்ணிலும்

**நேர்காணல் - நிர்மலன்**


அதனைக் கருத்திற்கொண்டு செயற்பட்டால் தான் எதிர்காலத்தில் உயர் வீச்சைக்காட்ட முடியும் என்கிறார்.

பயிற்சி, வசதி, வாய்ப்புக்கள் குறைவாக இருந்தாலும், தான் பலரின் ஆதரவுடன் இவற்றைப் பூர்த்திசெய்யக்கூடியதாக இருப்பதை இடையே முக்கியத்துவம் கொடுத்து பிரதீவ் குறிப்பிடுகிறார். விளையாட்டுத்திட்டமிடல் அதிகாரி றொஹான், விளையாட்டு அதிகாரி கிருபா, யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ரூபசிங்கம் மற்றும் நிதி உதவி போன்றவை செய்யும் எதிர்வீரசிங்கம், டாக்டர். பேதுரு பிலிப் எல்லோரையும் நன்றியுணர்வுடன் குறிப்பிட்டுக் கூறுகின்றார்.

கரப்பந்தாட்டம், பளு தூக்குதல், இறுதியாகக் குண்டெறிதல் என்று சகலதுறைகளிலும் ஈடுபட்ட பிரதீவ், தான் தனது சிறுவயதில் சரியாக இனங்காணப்பட்டு தனது துறை சரியாகத் தெரிவுசெய்யப் பட்டிருந்தால் இன்று நிச்சயம் தேசிய அளவில் ஏதோ ஒரு பதக்கம் பெற்றிருப்பேன் என்கிறார் திடமாக.

தனது இலக்கு இன்னும் மூன்று நான்கு வருடங்களில் தேசிய மட்டத்தில் ஒரு பதக்கம் பெறுவதுதான் என்பவர், யாழ்.பல்கலைக் கழக விளையாட்டுத்துறை டிப்ளோமாப் பட்டம் பெற்றவர். இருந்தும் இந்தத் துறையைப் பூர்த்தி செய்தவர்களுக்கு இதுவரை ஆசிரிய நியமனங்கள் ஏதும் வழங்கப்படவில்லை என்பது விந்தையான செய்தி. கல்வித் துறையில் உடற்கல்வி ஆசியர்களுக்கான தேவை நிரம்ப இருக்கும்போது, இவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படாமை ஏன் என்பதும் புரியாதுள்ளது. அவரது ஆதங்கத்தை அவருடன் உரையாடியபோது நன்கு ணர்ந்துகொள்ள முடிந்தது.

அவருக்கு நமது ஈழநாட்டின் வாழ்த்துக்களைக் கூறுவதுடன் - மேலும், விளையாட்டுத்துறையில் வேகமாக முன்னேறச் சந்தர்ப்பங்கள் அமைய வேண்டும் என்றும் அவருக்கு உற்சாகமும் கூறினோம்.



**குண்டெறிதல்**

| | | |
|---|---|---|
| 1999 | யாழ்.மாவட்டம் | 1 ஆம் இடம் |
| 2000 | யாழ்.மாவட்டம் | 1 ஆம் இடம் |
| 2001 | மாகாண மட்டம் | வெள்ளிப்பதக்கம் |
| 2001 | தேசிய நிலையில் பங்கேற்பு | |
| 2002 | மாவட்ட நிலை<br>மாகாண நிலை<br>களுத்துறை சமாதான விளையாட்டு விழா | 1 ஆம் இடம் |

**பளு தூக்கும் போட்டி - 2000**

யாழ்.மாவட்டம்

சாவகச்சேரிப் பிரதேசச் செயலகம்

| | |
|---|---|
| CLEAN AND JERK AND SNATCH | 1 ஆம் இடம் |
| DEAD LIFTING - 160 KG பாரம் | 1 ஆம் இடம் |
| SQUAT LIFTING - 135 KG பாரம் | 1 ஆம் இடம் |

# நடத்தை கிக்க காவாக்கால்....



**பா**வம் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்கூலி. ஏழு போட்டிகள் கொண்ட இந்திய - நியூசிலாந்து ஒரு நாள் போட்டிகளில் இதுவரை நடைபெற்ற ஐந்து போட்டிகளில் நான்கில் தோல்வி. ஐந்தாவதில் ஏதோ ஒரு விதமாகச் சமாளித்து ஒரு வெற்றி. நியூசிலாந்தின் கிரிக்கெட் விமர்சகர்கள் இந்திய அணியின் இந்நிலை கண்டு கடும் விமர்சனங்களை இந்திய அணி வீரர்களுக்கு எதிராக எழுப்பியிருக்கிறார்கள். அதிலும் கங்கூலிக்கு எதிரான கருத்துக்கள் ஓங்கி ஒலிக்கின்றன. ஒரு விமர்சகர் "கங்கூலி இத்தொடரில் நன்றாக ஆடவேயில்லை. ஆகவே, ஒரு சில ஆட்டங்களில் இருந்து அவர் ஒதுங்கிக்கொள்ளலாமே" என்கிறார். அதனை அவர் சாகசமாக, இவர் விளையாடாமல் விட்டால் அப்படி ஒன்றும் பாதகம் ஏற்பட்டுவிடாது என்கிறார். மேலும், தான் ரன்களைக் குவிக்காவிட்டாலும் பரவாயில்லை, அணியின் ஏனைய வீரர்களுக்கு உத்வேகத்தைக் கொடுத்து, அவர்களின் பங்களிப்பைச் சரியான முறையில் பெற்று, அணியை வெற்றிப் பாதையில் கொண்டு செல்லும் ஆற்றலும் அற்றவராக இருக்கின்றாரே என்கிறார். இவர் தன்னிச்சையாக, தனிமனிதனாக அணியைக் கொண்டு நடாத்த முற்படுகிறாரே அன்றி, அணியுடன் ஒன்றிணைந்து செயற்பட விரும்புகிறார் இல்லையென்றும் சாடுகிறார். நேப்பியரில் நடைபெற்ற ஆட்டத்தின் போது, நாற்பதுபேரை அடக்கக்கூடிய ஒரு பேருந்தைத் தான், தன் மனைவி, பணியாள் மற்றும் தனது பிள்ளை என மொத்தம் நாலுபேரை மட்டும் ஏற்றிக்கொண்டு, தங்கியிருக்கும் விடுதிக்குச் செல்லவேண்டும் என்று கடுமையாக நடந்துகொண்டிருக்கிறார் என உதாரணம் காட்டுகிறார். கங்கூலி போன்ற இன்னும் சில சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் தாங்கள் என்ன வானத்தில் இருந்து விழுந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறார்களா?

# தன்னம்பிக்கைக்கு பரிசு


மைக்கல் வோன்

ஆஷெஸ்தொடரில் 4-1 என்ற வகையில் இங்கிலாந்து தோல்வி. ஆனால் ஆட்டத் தொடர் நாயகன் இங்கிலாந்தின் மைக்கல் வோன். இவர் இந்தப் பெருமைபெறக் காரணம் தோல்வியுற்ற தொடரில் மனந்தளராது அடித்த மூன்று சதங்கள். ஐந்து டெஸ்ட் போட்டிகளிலும் 663 ரன்கள் குவித்த இவர், ஐந்தாவது டெஸ்டின் இரண்டாவது இனிங்ஸில் பெற்ற ஓட்ட எண்ணிக்கை 183. தொடராகத் தோல்வியைச் சந்தித்துக் கொண்டிருந்த ஒரு அணியின் வீரர், உலகின் சிறந்த பந்துவீச்சாளர்களை எதிர்கொண்டு, வேற்று நாட்டு மைதானங்களில் மூன்று சதங்களைக் குவித்திருக்கிறார். அத்தோடு, முதல் இனிங்ஸில் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் இரண்டாவது இனிங்ஸில் விளாசித்தள்ளுகிறார். ஆஷெஸ் வரலாற்றில் மைக்கல் வோனின் சாதனை குறிப்பிடத்தக்கது என்று பாராட்டுகிறார் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ் வோ. இதோடுகூட 2002 ஆம் ஆண்டில் அதிகூடிய ஓட்டங்களாக 1481 ஓட்டங்கள் பெற்று, கடந்த வருடத்தின் சிறப்பான விருதையும் பெற்றுக்கொண்டவராகிறார் மைக்கல் வோன்.

# நேர்கோட்டில் இரு துருவங்கள்

சர்வதேச கிரிக்கெட் உலகில் WWW என்னும் குறியீடு மிகவும் பிரபல்யமானது. கடந்த சில தசாப்தங்களின் முன், மேற்கிந்தியக் கிரிக்கெட் துறையில் சாதனை படைத்த வீக்ஸ், வொல்கொட், வொரல் மூவரின் பெயர்களின் முதல் எழுத்துக்களை மேற்கண்ட குறியீடு குறித்து நிற்கும். அவர்கள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் அழிக்கமுடியாத தடம்பதித்துச் சென்றவர்கள். இன்றும் நினைவு கூரப்படுபவர்கள். அந்த நினைவுகளுடே இன்று எண்பதுகளின் பின் WW என்னும் புதிய குறியீடு ஒன்று கிரிக்கெட் உலகில் இறுக்கமான பாதம் பதித்து இன்னும் சில காலத்துக்கும் களத்தில் நிற்கும். அதன் பின்னும் பேசப்படப் போகிறது. அந்தக் குறியீட்டால் பேசப்படுபவர்கள் வேறுயாரும் அல்ல வசீம் அக்ரமும், வக்கார் யூனுசும்தான். இவர்கள் இருவரும் பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றின் பல சாதனைகளுக்கு அச்சாணியாக இருக்கும் வேகப்பந்து வீச்சாளர்கள்.

வசீம், வக்கார் இருவரும் கடந்த தசாப்தத்தில் பாகிஸ்தான், மற்றும் சர்வதேசக் கிரிக்கெட் உலகில் முடிசூடா மன்னனாக விளங்கிய இம்ரான்கானின் வழிநடத்தலில் வந்தவர்கள். ஆரம்பத்தில் நெருங்கிய நண்பர்களாக இருந்த இருவரும் காலப்போக்கில் ஒருவரையொருவர் முகம்கொடுக்க முடியாதபடி அபிப்பிராயப் பேதப்பட்டுப் போனார்கள். கிரிக்கெட் விமர்சகர் ஒருவர்குறிப்பிடும்போது, அண்டி றொபட்ஸ் - மைக்கல் ஹோல்டிங் வேகப்பந்துச்சோடி, கேட்லி அம்புறோஸ் - கோட்ணி வோல்ஷ் சோடி, டெனிஸ் லிலி - ஜெவ் தொம்சன் சோடி என்று ஒரு காலகட்டத்தில் வேகப்பந்து வீச்சுக் சோடிகளைக் கலங்கடித்த இந்த வேகப்பந்துவீச்சுச் சோடிகளைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர்களுக்கு இணையாக ஏன் சற்று மேலாகவே இந்த WW இருவரையும் சிலாகிக்கிறார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் என்றுமே காணப்படுவது - அணி பிரிதல், அபிப்பிராய பேதங்கள், மிக வேகமான தலைமை மாற்றங்கள், அதன் பேரில் ஏற்காமை, ஒவ்வாமை என்ற குறைபாடுகள் கிரிக்கெட் ரசிகர்களால் என்றுமே வேதனையுடன் அவதானிக்கப்பட்டு வருபவைதான். ஆனால், இப்படி மிக அருமையாக அமைந்துவிட்ட வேகப்பந்துச் சோடியின் கருத்துவேறுபாடு மிகமிக அங்கலாய்ப்புடன் சர்வதேச ரீதியாக நோக்கப்பட்டன. இந்த நிலையில் ஒரு சந்தர்ப்பத்தில் இம்ரான்கான், இவர்களின் கசப்புணர்வை நீக்கும் வகையில் வசீம் அக்ரத்தைத் தலைவராகவும், வக்காரை உபதலைவராகவும் பாகிஸ்தான் அணியில் பதவி வகிக்கச் செய்வதில் வெற்றியும் கண்டார்.

ஆனால், இதுவும்கூட நீண்டகாலம் நிலைக்கவில்லை. பிற்பட்ட ஒரு காலகட்டத்தில் 1999 இல் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு வசீம் அணித்தலைவராக இருந்தபோது, வக்கார் அணியிலேயே இல்லை. இந்த வகையான பாரிய கழுத்தறுப்புக்கு வசீமே காரணம் என்று வக்கார் வெளிப்படையாகவே தன் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.



வக்கார்

தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்ட் - இவர்களைப்பற்றிக் கருத்துக் கூறும்போது, இந்த இருவரின் அதீதத்திறமையான பந்துவீச்சைப் பார்த்துத் தான் மலைத்துப் போனதாகக் குறிப்பிட்டுள்ளார். வக்கார் மிக வேகமாகப் பந்துவீசி அதிரவைத்தால் வசீம் ஒருவகை நளினத்துடன் வேகப்பந்து வீசுவார். இவர்கள் இருவரும் இம்ரானின் வழிகாட்டலை ஏற்றுப் பந்து வீசுபவர்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் தற்காப்பு ஆட்டநிலைக்குத் தம்மை உட்படுத்திக்கொள்ள விரும்பாதவர்கள். தாக்குதல் முறையிலேயே பந்துவீசுபவர்கள். பந்துவீச்சாளராகவோ, அணியை வழி நடாத்திச் செல்பவர்களாகவோ இந்தப் பணியையே பின்பற்றிச் செல்பவர்கள். இவர்களின் கால கட்டத்தில் எத்தனையோ வேகப்பந்து வீச்சாளர்கள் வந்தாலும், இவர்களின் பெருமை இன்றுவரை உயர்வாகவே இருக்கிறது.

துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா இருவரும் நிறையவே சாதனை படைத்தவர்கள். இவர்கள் பாகிஸ்தான் அணிக்கு எதிராக நிறையவே ரன்கள் குவித்தவர்கள். வசீமுக்கும், வக்காருக்கும் முகங்கொடுத்துத் தாம் எடுத்த அந்த ஓட்டங்கள் என்றுமே மிகவும் பெறுமதிவாய்ந்தவை. ஏனெனில், அவர்களை எதிர்கொள்வது அவ்வளவு கடினமானது என்று கூறியிருக்கிறார்கள். இரு வீரர்களுமே அதீத திறமை பெற்றவர்களாக இருந்த அதேவேளை, அவர்களின் ஆட்டம் தொடர்பாகப் பலவித சர்ச்சைகளுக்கும் உள்ளாகாமல் இல்லை. பந்தைச் சேதப்படுத்துதல், ஆட்டநிர்ணயச் சதியில் ஈடுபட்டவர்கள், பல முரண்பாட்டு இயல்புகள் என்று பல குற்றச்சாட்டுகள் வேகப்பந்துகளாக இவர்கள் மீதே திரும்பத்திரும்ப தாக்குதல்களை மேற்கொண்டிருந்தன. இப்படிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்களில் ஒருவர் இங்கிலாந்தின் கிரிக்கெட் வீரர் இயன் பொத்தம். இவர்கூட இறுதியில் கருத்துக்கூறும்போது, இவ்வளவு ஆற்றல் நிறைந்தவர்கள் ஏன் இப்படியான செயல்கள் புரிந்து வெற்றிகள் பெற முயலவேண்டும் என்றார். ஆகவே, இயன்பொத்தமும் இவர்கள் தம் ஆற்றல்களை அங்கீகரித்தவர் ஆகிறார். முப்பத்தேழு வயதாகும் வசீம் அக்ரத்தின் சர்வதேச கிரிக்கெட் அனுபவம் பதினெட்டு வருடங்களாகும். முப்பத்து நான்கு வயதாகும் வக்கார் யூனுசின் சர்வதேச கிரிக்கெட் அனுபவம் பதின்மூன்று வருடங்கள். இவ்வளவு நீண்ட காலம் வேகப்பந்து வீச்சாளர்களாகக் கிரிக்கெட் உலகில் தாக்குப்பிடிப்பது ஒரு சில அசாதரண திறமை தொண்டவர்களாலேயே முடியும். அது இவர்களிடம் நிரம்பவே இருக்கின்றது. அதுவும் இந்த இருவரும் ஒரே நாட்டின் வீரர்களாக இருக்கிறார்கள். இது பாகிஸ்தானுக்கு எவ்வளவு பெரியதொரு வளம். இது தொடர்பில் இப்படியான ஒருசோடி அயல்நாடான தமது நாட்டுக்குக் கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்படும் இந்திய கிரிக்கெட் விமர்சகர்கள், மனப்பூர்வமாகவே வசீமையும் வக்காரையும் பாராட்டுகிறார்கள்.



வசீம்

இவர்கள் இருவரும் இங்கிலாந்தின் கவுண்டி அணிகளில் விளையாடியவர்கள். வசீம் - லங்காஷயர் அணிக்காக விளையாடியவர். வக்கார் - கிளமோர்கன், மற்றும் சர்ரே அணிகளுக்காக விளையாடியவர். கிரிக்கெட்டின் எல்லாப் பெருமைகளையும் பெற்றவர்கள் இவர்கள். வசீம் சிறப்பாக ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரரும்கூட.

இவர்கள் இருவரிடமும் இன்னமும் நிறையவே கிரிக்கெட் இருக்கிறது என்று பரிபூரணமாக இவர்கள் நம்புகிறார்கள். ஏன் ரசிகர்களும் அதே நம்பிக்கையுடன்தான் இருக்கிறார்கள். இந்த நம்பிக்கைதான் ஏதோ ஒருவகையில் இருவரையும் எதிர்வரும் தென்னாபிரிக்க உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் ஒன்றாகத் தொடர்ந்துசெல்ல வைத்திருக்கிறதுபோலும். தமது நாட்டுக்காக என்று வரும்போது இரு வீரர்களுமே தமது திறமை அனைத்தையும் ஒன்றிணைத்து தமது நாட்டுக்காக அத்திறமையை அர்ப்பணித்தே வந்திருக்கிறார்கள். அவர்களது நட்பு படிப்படியாகத் தேய்ந்து கொண்டுதான் போயிருக்கிறது.

ஆனால், அவர்களின் பந்துவீச்சுத் திறமையும் தனித் தனியான ஆளுமையும் என்றுமே மங்கிவிடவில்லை. இதனால்தானோ என்னவோ தமது சர்வதேச கிரிக்கெட் வாழ்வின் ஓய்வு காலத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக் கும் வசீமும், வக்காரும் உலகக் கிண்ணப் போட்டிகளில் தமது விசேட ஆற்றல்களை வெளிக்காட்டுவோம் என்று கூறுகிறார்கள். எது எவ்வாறாயினும் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் WW எனும் குறியீடு என்றும் மங்காமல் இருக்கும்.

ஏனெனில், அந்தளவிற்கு இருவரும் சாதனை புரிந்தவர்கள். ✻

— நிர்மலன் —

# வரிசைகள் மாறும்

தை மாதம் ஐந்தாம் திகதி ICC தனது டெஸ்ட் ஆட்டத் தரவரிசைப்படுத்தலை அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில் இதுவரை காலமும் டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பெற்றிருந்த அவுஸ்திரேலியா இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட, தென்னாபிரிக்கா முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. பாகிஸ்தான் - தென்னாபிரிக்க இரண்டாவது டெஸ்ட்டில் தென்னாபிரிக்கா வெற்றிகண்ட ஆட்டத்தை இறுதியாகக் கொண்டு கணிக்கப்பட, தரவரிசைப்படி இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மெதுமெதுவாக முன்னேறி நியூசிலாந்து அணி மூன்றாவது இடத்தைப் பெற்றிருப்பது சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படத்தக்கது. நியூசிலாந்து அணியைத் தொடர்ந்து இலங்கை, இங்கிலாந்து, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான், சிம்பாவே என்று தரவரிசை முடிவடைகிறது. இந்தத் தரவரிசை முறையானது 1996 மே மாதத்தில் இருந்து கணிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தரவரிசையில் பங்களாதேஷ் இன்னமும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இவர்கள் அநேகமாக 2003 ஏப்ரலில் தமது ஒன்பதாவது டெஸ்ட்த் தொடரைப் பூர்த்திசெய்த பின்பே, தரவரிசைக்குள் உள்வாங்கப்படுவார்கள். மேற்கண்ட ICC தரவரிசையைப் பெரிதாக அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ் வோ ஏற்றுக்கொள்ளவில்லை.

— நிமலா —




தென்னாபிரிக்காவை வழிநடத்தும் பொலக்

அவரது கருத்துப்படி வெறும் எண்கள் (DIGITS) உயர்வைக் குறிக்காது, திறமையின் அங்கீகாரமே அதனை நிர்ணயிக்கும் என்கிறார். எதுவாயினும் ரசிகர்கள் மத்தியில் இன்னும் நீண்டகாலம் இந்த இரண்டு அணிகளும் முதல் இரண்டு இடங்களையும் மாறிமாறிப் பெற்றுக்கொள்ளும் என்ற எண்ணத்தில் மாற்றம் இராது.

# இதுதான் யதார்த்தம்

நஸார் ஹுசைன் அடக்கமாக, யதார்த்தத்தைப் புரிந்து கொண்டவராக இருக்கிறார். ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் அபாரமாக வென்ற மகிழ்ச்சியில் அணிவீரர்கள் திளைத்திருக்கும் நாட்கள். 4-1 என்ற வகையில், 'அதுவும் சில ஆட்டங்களில் மோசமாகத் தோற்றிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது என்கிறார். இறுதி டெஸ்ட் போட்டி இங்கிலாந்தின் கிரிக்கெட் கட்டுமானத்தில் எந்தப் பெரிய மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது என்கிறார். அவுஸ்ரேலியாவை நாம் ஏன் வெல்லமுடியாது என்பதற்குக் காரணங்கள் பெரிதாக இருப்பதாக தெரியவில்லை என்பவர் - ஆனால், அதற்கான மாற்றங்கள் இங்கிலாந்தில் நடைபெறவேண்டும் என்கிறார்.



நஸார் ஹுசைன்

இன்றைக்கு உலகின் அதிசிறந்த அணி அவுஸ்திரேலியாதான் என்பதை எதுவித தயக்கமும் இன்றி மனங்கொள்ளும் நஸார் ஹுசைன், அந்த அணியைப்போல இங்கிலாந்து அணியையும் படிப்படியாக வளர்த்தெடுக்க வேண்டும் என்கிறார். தான் எதிர்த்து விளையாடிய எந்த அணியையும்விட அவுஸ்திரேலியா சிறந்ததென்றும் கருதுகிறார். 1986- 87 ஆஷஸ் தொடருக்குப் பின் இதுவரை இங்கிலாந்து ஆஷஸ் தொடரை வென்றதே இல்லை. இன்னொரு தடவை ஆஷஸ்தொடர் போட்டிகள் நடைபெறும்போது இங்கிலாந்து அணி புதியதொரு தோற்றத்துடன் காணப்படும் என்பதே அனைவரும் வேண்டும் எதிர்பார்ப்பாகும்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

தாம்இன் புஉறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்று அறிந்தார். - *திருக்குறள்.*

## நமது நோக்கு

## கல்விச்சாலைகளின் கலக்கநிலை!

யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள பதினோராம் ஆண்டு வரையான வகுப்புக்களைக் கொண்டிருக்கும் சிறிய பாடசாலை அது.

அயலிலுள்ள பகுதிகளிலிருந்து மாணவர்கள் ஏராளமாய் அங்கு கல்வி கற்க, ஒரு காலத்தில் வகுப்புக்கள் நிறைந்திருக்கக் காணப்பட்ட அப்பாடசாலையில் - இம்முறை தரம் ஒன்றில் சேர்ந்த மாணவர்களின் தொகை என்ன தெரியுமா...?

ஆக நான்கு மாணவர்கள் மட்டுமே அப்பாடசாலையில் சேர்ந்தனர்.

அதேவேளை - அப்பாடசாலைச் சூழலிலிருந்து அதிகாலையில் 'பாடசாலைச்சேவை' வாகனங்களில் பெருந்தொகையான சின்னஞ்சிறார் கள் அள்ளுண்டு செல்வதையும் - அப்பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும், அப்பாடசாலையில் புதிதாகச் சேர்ந்த நான்கு மாணவர்களும் - அவர்தம் பெற்றோரும் கவலையுடன் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இது தனியே அந்தக் குறிப்பிட்ட பாடசாலையில் என்று மட்டுமல்ல - யாழ். மாவட்டத்திலுள்ள பல சிறிய பாடசாலைகளும், கிராமப்புறப் பாடசாலைகளும் எதிர்நோக்கும் மிகப் பாரிய சவாலாக மாறியிருக்கின்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரபல பாடசாலைகளில்- பெருந்தொகையான மாணவர்கள் குவிந்துவர, இந்தச் சிறிய பாடசாலைகள் வெறிச்சோடிப் போகும் நிலை ஏன் ஏற்பட்டது என்பது மிகப்பெரிய வினாவாக மேலெழுந்து வருகின்றது.

ஒருபுறம் - பிரபல பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கே வகுப்புக்களின் பிரிவுகள் 3, 4 என அதிகரிக்க- மறுபுறம் சிறிய பாடசாலைகளைக் கடந்து நகரத்திற்கு நகரும் மனோபாவம் ஏன் வியாபிக்கின்றது என்பது கல்வியாளர் சமூகத்தில் ஆதங்கத்தைத் தோற்றுவித்து வருகின்றது

சிறிய பாடசாலைகள் இவ்விதமான தளர்வினைச் சந்திப்பதற்குரிய காரணிகள் எவையெனக் கண்டறியப்பட்டு, அவற்றுக்குத் தீர்வு காணப்படாவிட்டால் வரும் ஆண்டுகளில் இப்பாடசாலைகளின் மொத்த மாணவர் தொகையே இரட்டை இலக்கங்களுள் அடங்கிவரும் பரிதாபநிலை தோன்றிவிடலாம்.

இது நீடித்தால் - இப்பாடசாலைகள் தமது செயற்பாட்டுத் தன்மையை இழக்கும் அபாயம் வந்துசேரும். இத்தளர்வு நிலை பரவி - கற்கும் மாணவர்களிலும் கற்பிக்கும் ஆசிரியர்களிலும் சலிப்புநிலை தோன்ற - பிரபல பாடசாலைகளுக்கு பிள்ளைகளை 'ஏற்றுமதி' செய்யும் பொருளாதார வசதி வாய்ப்பில்லாத பெற்றோரால் - தமது பிள்ளைகளின் கல்வியும் இடைநிறுத்தப் படலாம்.

இது வெறும் கற்பனையான எதிர்வு கூறலல்ல. அண்மையில் கரவெட்டிப் பகுதியிலுள்ள விநாயகர் வித்தியாலயம் என்னும் சிறிய பாடசாலைக்கு நேர்ந்த கதிதான் இது.

இவ்வாறு சிறிய் கிராமப் பாடசாலைகள் சரிவைச் சந்திப்பதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என ஆராய்ந்தால் கிடைக்கும் பதிலும் திருப்திகரமானதாக இல்லாமலுள்ளது.

யாழ். குடாநாட்டிலுள்ள பிரபல பாடசாலைகள் - இன்னும் வளமுள்ள பாடசாலைகளாக மாற்றம் காண, இச் சிறிய பாடசாலைகள் மெல்லச் சாகும்நிலையை அனுகிவருதாகவே அறியமுடிகின்றது.

இந்த நிலையைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடமை பெருமளவில் கல்வித் திண்ணைக்களத்தினருக்கும், அதேவேளை பொறுப்புணர்வு பெற்றோருக்கும் உள்ளது.

சிறிய கிராமப் பாடசாலைகளுக்கான வளப்பங்கீடும், ஆசிரியர் வளமும் மிகுந்த தரமுடன் பேணப்பட்டு வந்திருந்தால் - இவ்வாறான நிலை ஏற்படுவது காலத்துக்குக் காலம் ஓரளவாவது தடுக்கப்பட்டிருக்கும்.

அருகிலுள்ள பாடசாலை வளமுடனும், தரத்துடனும் இயங்கியிருந்தால் - அப்பாடசாலையை விடுத்து நகரப் பாடசாலைக்கு பிள்ளையை அனுப்புவது பற்றி பெற்றோர் சற்று சிந்திக்கவே செய்வர். இது யதார்த்தம்.

ஆனால், அருகிலுள்ள பாடசாலை வளமிழந்து போனால் - பெற்றோரின் கவனமும் நகருக்கு நகர்வது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இந்நிலையில் - இவ்விடயத்தில் முதற்கட்ட நடவடிக்கைகள் கல்வித் திணைக்களத்திடமிருந்தே மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேவேளை - பெற்றோரும், ஒவ்வொரு பகுதியின் நலன்விரும்பிகளும் இணைந்து இத்தகைய பாடசாலைகளை 'சாகவிடாது' காக்கவும் முன்வரவேண்டும்.

இல்லையேல் - இனிவரும் காலத்தில் சிறிய, கிராமப் பாடசாலைகள் பாழடைந்து, உருக்குலைந்துபோவதே விளைவுகளாகிவிடும்.

# தமிழ்ச் செல்வன், கருணா இன்று வன்னிக்குத் திரும்புகின்றனர்

தாய்லாந்துப் பேச்சுக்களில் புலிகள் தரப்பில் கலந்து கொண்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் மற்றும் கேணல் கருணா ஆகியோர் இன்று வன்னிக்குத் திரும்பிச் செல்லவுள்ளனர்.

நான்காம் கட்டப் பேச்சுக்களில் கலந்துகொண்ட புலிகளின் தரப்புக் குழுவில் இடம்பெற்றிருந்த இவர்கள், இன்று அதிகாலை கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு விமானம் மூலம் வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வன்னிக்கு இன்று காலை புறப்பட்டுச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

வன்னிக்குத் திரும்பியதும் தாய்லாந்துப் பேச்சுக்கள் தொடர்பாகப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து அது தொடர்பாக விபரிப்பார்கள் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, நான்காம் சுற்றுப்பேச்சுக்களில் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்ட சட்ட நிபுணர் உருத்திரகுமாரன் அமெரிக்காவுக்கும், ஜோய் மகேஸ்வரன் அவுஸ்திரேலியாவுக்கும் நேற்றிரவு புறப்பட்டுச் சென்றனர்.

# கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையில் எம்.பிக்கள் அங்கம் வகிக்கலாம்

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்க முடியாது என விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை உயர் நீதிமன்றம் ரத்துச்செய்ய உத்தரவிட்டுள்ளது.

அர்ஜுன ரணதுங்க உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

விளையாட்டுத்துறையில் அரசியல் தலையீடுகள் இருக்கக் கூடாது என்பதற்காகவே, இந்த வர்த்தமானி அறிவித்தலைத் தாம் வெளியிட்டதாக, விளையாட்டுத்துறை அமைச்சரின் சட்டத்தரணி வாதிட்டார்.

எனினும், இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த உயர் நீதிமன்றம், வர்த்தமானி அறிவித்தலை ரத்துச்செய்ய உத்தரவிட்டதுடன் வழக்குச் செலவாக 50 ஆயிரம் ரூபாவை அர்ஜுன ரணதுங்காவுக்கு செலுத்துமாறும் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு உத்தரவிட்டது.

# கோபி அனானின் விஜயம் சந்திரிகாவுக்குத் தெரியாது

## வெளிவிவகார அமைச்சர் மன்னிப்புக் கோரினார்

ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனானின் இலங்கை விஜயம் பற்றி ஜனாதிபதி சந்திரிகாவுக்குத் தகவல் தெரிவிக்காமல் விட்டது தொடர்பாக, வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோவுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டிருக்கிறது.

கோபி அனானின் வருகை குறித்து வெளிவிவகார அமைச்சு ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை. கோபி அனானைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி நேரம் ஒதுக்கித் தரவில்லை என்று ஊடகங்களில் செய்தி வெளியானதையடுத்து, ஜனாதிபதி சந்திரிகா இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சரிடம் விளக்கம் கோரினார்.

இதையடுத்தே கோபி அனான் இலங்கைக்கு வரவிருக்கும் விடயம் சந்திரிகாவுக்குத் தெரியவந்தது. இந்த கலந்துரையாடலின்போது, இது தொடர்பாக ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தாமல் விட்டதற்கு, வெளிவிவகார அமைச்சர் மன்னிப்புக் கோரியதாகவும் தெரியவருகிறது.

# யாழ். கரையோரப்பகுதி சுகாதாரச் சீர்கேடு; ஆராய கொழும்பு பிரதிமேயர் குழு வருகிறது!

## நேரில் பார்வையிட்டு நிலைமைகளை அவதானிக்கும்

படையினரது கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட யாழ்.கரையோரப் பிரதேசங்களில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பதற்காக கொழும்பு மாநகரசபையின் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொனறு பிரதிமேயர் அசாத் சாலி தலைமையில் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

அமைச்சர் மகேஸ்வரன், இப்பிரதேச சுகாதாரச் சீர்கேடுகளை இனங்கண்டு அறிக்கை ஒன்றைத் தயாரிக்க உதவி செய்யுமாறு கொழும்பு மாநகர மேயர் பிரசன்ன குணவர்த்தனவைக் கோரியிருந்தார்.

இதற்கமைவாக யாழ்.கரையோரப் பிரதேசங்களான கரையூர், பாசையூர், திருநகர், கொழும்புத்துறை, தோப்புக்காடு (காரைநகர்) ஆகியவற்றில் நிலவும் இப்பிரதேச மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான, சுகாதாரம், நீர் விநியோகம், வடிகாலமைப்பு மற்றும் பொதுவசதிகள் போன்ற குறைபாடுகளை இனங்கண்டு, அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்காக கொழும்பு மாநகரசபையின் பிரதிமேயர் ஜனாப் எம்.அசாத் சாலி தலைமையில் கொழும்பு மாநகரசபையின் சிரேஷ்ட பொறியியலாளர் அடங்கிய குழுவொன்று அமைச்சர் மகேஸ்வரனுடன் மேற்படி பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இப்பிரதேசங்களில் இவ்வாறு இனங்காணப்பட்ட அடிப்படை வசதிக் குறைபாடுகளை உரிய அமைச்சுக்களினதும், நிறுவனங்களினதும் உதவியோடு சீர்செய்வதற்கான முயற்சிகளை அமைச்சர் மகேஸ்வரன் துரிதமாக மேற்கொண்டுள்ளார் என இந்து கலாசார விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# வீதியில் தாக்கப்பட்டார் அமரபுர சங்கநாயக்கர்!

அமரபுர நிக்காயவின் மகாசங்கநாயக்கர் பாகம விமலஜோதி தேரர் வீதியில் ஏற்பட்ட சிறுவிபத்து ஒன்றையடுத்து தாக்கப்பட்டார்.

அமரபுர மகாசங்கநாயக்கர், கிரிகல என்ற இடத்தில் ஒரு நிகழ்வுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோதே அவரது வானை இன்னொரு வான் முந்திச் செல்லமுயன்றது.

இதன்போது ஏற்பட்ட சிறுவிபத்தையடுத்து வானில் வந்த இருவரால் அமரபுர மகாசங்கநாயக்கர் தாக்கப்பட்டார். இதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு மகாசங்கநாயக்கர் மீது தாக்குதல் நடத்திய இருவரைக் கைது செய்துள்ளனர்.

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் வருடாந்தம் 4000 புகார்கள்!

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தகவல்

இலங்கையில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக் குட்படுத்தப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதாகச் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக 4 ஆயிரம் புகார்கள் வருடந்தோறும் செய்யப்படுகின்றன. இவற்றுள் குற்றவியல் ரீதியான 2 ஆயிரம் புகார்களும், ஆயிரம் உடல் ரீதியான பாலியல் துஷ்பிரயோகங்களும் ஆகும்.

அத்துடன், சிறுவர்களை வர்த்தக ரீதியாக பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. சுற்றுலாப்பயணிகள் தங்கும் விடுதிகளில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்தரப் பரீட்சைப் புள்ளி அடிப்படையில் இரண்டாயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காகச் செய்யப்படும் ஆட்சேர்ப்பின்போது, ஆசிரிய ஆட்சேர்ப்பு விதிகள் பின்பற்றப்படும் என்று கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

வட - கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் தற்போது 5 ஆயிரம் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கும், 800 ஆங்கிலமொழி ஆசிரியர்களுக்கும் வெற்றிடங்கள் உள்ளன.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக 3 ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதில் 2 ஆயிரம் பேருக்கு, க.பொ.த உயர்தர பெறுபேற்றின் அடிப்படையிலும் ஆயிரம் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்படவுள்ளது.

அவசரப்பட்டு ஆசிரிய நியமனங்களை வழங்கி, ஆசிரியர்களின் தரத்தைக் குறைத்துக்கொள்ள விரும்பவில்லை எனக் கூறியுள்ள அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, இந்த ஆசிரியர்களைக் கல்வி கற்பிக்க அனுமதிப்பதற்கு முன்னர் ஒட்டுமொத்த ஆசிரிய முன்சேவைப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மகரகம தேசிய கல்வி நிறுவகம் ஊடாகவும் காலத்துக்குக் காலம் பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்த ஆட்சேர்ப்புத் தொடர்பான இறுதிமுடிவு அடுத்த சில வாரங்களில் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பெரும்பாலும் உறுதியாகிவிட்டது பொ.ஐ.மு. - ஜே.வி.பி. கூட்டணி!

அரசாங்கம் கடந்த வாரத்தில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆட்



பட்டது. அதேவேளை, ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பவற்றிற்குச் சற்று உற்சாகம் தரும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தாய்லாந்துச் சமாதானப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற அதேநேரம், ஏற்கனவே நடைபெற்றதைப் போலன்றி இந்தமுறை பலத்த எதிர்பார்ப்புடன் அந்தப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தமை அரசாங்கத்துக்கு முதலாவது சவாலாக இருந்தது.

மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் அதியுயர் பாதுகாப்பு வலயத் திட்ட வரைபு சமாதான நகர்வில் பின்னோக்கிய பிரதிபலிப்பைக் கொண்டு வந்துவிடுமோ என அரசாங்கம் அச்சம் கொண்டிருந்தது.

எனினும் - தாய்லாந்தில் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. இது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பூரண திருப்தியை அளித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அதியுச்சப் பாதுகாப்பு வலயம் தொடர்பாக முரண்பட்டால், அவர்கள் பேச்சுவார்த்தை மேசையில் இருந்து விலகிவிடுவார்கள் எனப் பல தரப்புகளும் அச்சமூட்டியமை அரசுக்கும் தலைவலியாக மாறியது.

என்றாலும் - நோர்வேயின் தலையீட்டினால் தாய்லாந்துப் பேச்சில் அதியுச்சப் பாதுகாப்பு வலயத்தில் இருந்து படையினர் விலகிச் செல்லும் ஏற்பாடு தொடர்பான, இறுக்க நிலை தளர்வுகண்டது. இணக்கத்தைக் கொண்டுவரக்கூடிய விடயங்களைப் பேசி முறுகல்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை இதற்கான முக்கிய காரணமாகும்.

மாற்றுத் திட்டங்களை முன்வைக்கக் கூடிய வகையில் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ளும் இரண்டு தரப்புக்களும் முன்னேறியுள்ளன. இந்த முன்னேற்றமே உயர் பாதுகாப்பு வலய விடயத்தில் கூட இரண்டு தரப்பையும் முறுகல் நிலைக்கு இட்டுச் செல்லாமல் பாதுகாத்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சமாளித்து விட்டோம் என அரசாங்கம் தற்போதைக்குத் திருப்தி கொண்டாலும், இராணுவத் தரப்பு தமக்கு எதிராக மாறிவிடுமோ என்ற அச்சமும் அதற்கு ஏற்பட்டுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து படைவிலகல் நடைபெறுமானால், அதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உட்படப் பாதுகாப்பு அமைச்சு நிபந்தனை விதித்த மறுகணமே தருணம் பார்த்திருந்த ஜனாதிபதியும் விழித்துக் கொண்டார்.

சரத் பொன்சேகாவை அழைத்துத் தமது பாராட்டைத் தெரிவித்தார். இது அரசாங்கத்துக்கு மேலதிக தலைவலியை ஏற்படுத்தியது.

இந்தநிலையில் பாதுகாப்பு அதிகாரிகளை அழைத்து இரகசியங்களைக் காக்கக்கூடிய புத்திமதிகளைக் கூறியதன் மூலம், பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க தமது அரசியல் உறுதிப்பாட்டை நிலைப்படுத்திக்கொள்ள முடிந்தது.

சமாதான முன்னகர்வில் தடைகள் ஏற்பட்டால், அது நாட்டுக்குப் பாதிப்பைக் கொண்டுவந்துவிடும் என்பதைக் காட்டிலும், தமது அரசாங்கத்துக்கு ஆயுட்காலத்தைக் குறைத்துவிடும் என்ற சந்தேகம் பிரதமருக்கு ஏற்பட்ட நிலையிலேயே, அவா நாட்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் தீர்மானத்தை



அரசாங்கத்திற்குத் தலைவலியாகும் ஜே.வி.பியின் நடவடிக்கைகள்.

மேற்கொண்டார்.

வழமையாக ஜனாதிபதியின் நாட்டு மக்களுக்கான உரையைக் காட்டிலும், பிரதமரின் உரைக்கு எதிர்பார்ப்பு அதிகரித்திருந்தது. கடந்த காலத்தில் முக்கியமான தருணங்களில் கூட ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய வேளையில் அதில் எவ்வித நம்பிக்கைகளும் அல்லது தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவான விடயமாகும்.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையின் இறுதியில் குறிப்பிட்ட சில வசனங்கள் மக்கள் மத்தியில் வினாக்களைத் தொடுத்தன.

கசப்பானாலும் உண்மையைச் சொல்வதே சிறந்தது. அதனாலேயே தாம் உண்மையைச் சொல்வதாக தனது உரையின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். இது பலராலும் பல்வேறு கோணங்களில் புரிந்து கொள்ளப்பட்டது. பிரதமர் நாட்டின் பொருளாதாரநிலை தொடர்பாகவே இந்தக் கருத்தை வெளியிட்டார் என ஒரு தரப்பு கருத்து வெளியிட்டது.

எனினும், மறுதரப்பு - நாட்டின் நன்மைக்காக- மக்களுக்குக் கசப்பானதாக இருந்தாலும், சில விட்டுக் கொடுப்புகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்தேயாக வேண்டும் என்பதையே, அவர் சிலேடையாகக் கூறியதாகக் கருத்து வெளியிட்டது.

எது எப்படியிருப்பினும் - பிரதம மந்திரி நாட்டு மக்கள் மத்தியில் தமது அரசாங்கத்துக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் தொலைக்காட்சியில் தோன்றியது, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் உறுதியான ஆட்சியைத் தொடரும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஏற்படுத்துவதற்கேயாகும் என்பதே உண்மை.

நாட்டின் அபிவிருத்திக்காக வெளிநாட்டு உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்ற அதேநேரம், அரசாங்கம் வெளிநாடுகளின் குறிப்பாக, உலக வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப அசைவை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

முதலீடுகளை அதிகரிப்பதற்கும், செலவீனங்களை குறைப்பதற்கும் இந்த நடவடிக்கைகள் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் முக்கியமானதாக அமைந்துள்ளன.

இதனடிப்படையில் அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட முன்னெடுப்புக்களே தொழிலாளர் சார்பில் கொண்டுவரப்பட்ட நான்கு சட்ட மூலங்களாகும்.

இந்தச் சட்ட மூலங்கள், அரசாங்கம் எதிர்பார்த்ததைவிட அதற்குப் பாரிய எதிர்ப்பைக் கொண்டு வந்தது.

நாட்டின் எதிர்க்கட்சிகளுடன் தொழிலாளர் வர்க்கம் இணைந்துவிடுமோ என்ற அச்சம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுவிட்டது. அதே நேரம், தமக்கு உதவி செய்து கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இந்தச் சட்டமூலங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தமை அரசாங்கத்தை நடுங்கச் செய்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், தீவிரமாகச் செயற்படுவதெனப் பிரதம மந்திரி தீர்மானித்தார்.

தொழிலாளர் சட்டமூலங்களை முன்வைத்த அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை ஓரங்கட்டிவிட்டு, வெளிவிவகார அமைச்சர் ராஜித சேனாரட்னவே இதற்குப் பொருத்தமானவர் என அவர் தீர்மானித்தார்.

"யாப்பகூவ" என்ற இடத்தில் அமைச்சின் பணிகளில் ஈடுபட்டிருந்த ராஜித சேனாரட்னவை பிரதமர் ரணில் கொழும்புக்கு அழைத்துத் தொழிற் சட்டமூலங்கள் தொடர்பான எதிர்ப்புக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

இதன்படி ராஜித சேனாரட்ன பொதுஜன ஐக்கிய முன்னணியில் அதிருப்தியுற்றிருக்கும் லங்கா சமசமாஜக்கட்சியின் செயலாளர் பட்டி வீரக்கோனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது அரசாங்கத்தின்

## தெற்குத் திசையினிலே....

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

தொழிற்துறை தொடர்பான சட்ட மூலங்களுக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவளிக்க இணக்கம் வெளியிட்ட பட்டி வீரக்கோன், தொழிற்சங்கவாதியான பாலா தம்புவை பயன்படுத்திச் சட்டமூலங்களில் திருத்தங்களை முன்வைக்கவும் இணங்கினார்.

இந்த நிலையில் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த தொழில் சட்டமூலங்கள் விவாதத்திற்கு வந்தபோது, அனைத்து தொழிற் சங்கங்களும் அதனை எதிர்த்தமை அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது.

எனினும், லங்கா சமசமாஜக் கட்சியின் மூலம் திருத்தங்களைக் கொண்டு வருவதன் ஊடாகவும், அரசாங்கத்திற்குச் சார்பான தொழிற் சங்கங்களைத் திருப்திப்படுத்துவதன் மூலமாகவும் சம்பந்தப்பட்ட சட்டமூலங்களை அரசாங்கம் நிறைவேற்றிக் கொள்வதில் வெற்றி கண்டது.

இருந்தும், இந்த வெற்றியின் மூலமான திருப்தி தொடருமா என்பது கேள்விக்குரியதாகவே இருந்தது. நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட சட்ட மூலங்களை நடைமுறைப்படுத்த முனையும்போது அரசாங்கம், தொழிலாளர் மத்தியிலும், தொழிற் சங்கங்களின் மத்தியிலும் பலத்த எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கம் என்ன தீர்மானங்களை எடுக்கப்போகிறது என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயமாகும்.

இது இவ்வாறிருக்க, பொதுஜன ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து செயற்படுவதற்கான முதன்மைப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம் அளவில் இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படத் தொடங்கி விடும் ஒரு நிலை காணப்படுகிறது.

என்ன காரணம் கூறினாலும் பொதுஜன ஐக்கிய முன்னணி - மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் கூட்டு, அரசாங்கத்துக்குப் பாரிய பொறுப்பு ஒன்றைக் கண்ணெதிரே கொண்டு வந்திருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்



பப்படும் என உறுதிமொழி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள நிலையில், பொருளாதாரச் சுமைகள் மக்களின் மீது சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாள்தோறும் பொருட்களின் விலைகள் வேகமாக உயர்ந்து செல்கின்றன. ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் கோதுமை மா, சமையல் எரிவாயு போன்றவற்றின் விலை உயர்வுகளில் அரசாங்கம் தலையிட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இது புதிய பொதுஜன ஐக்கிய முன்னணி- மக்கள் விடுதலை முன்னணி கூட்டுக்குச் சாதகமாக அமையப்போகிறது.

எனவே, தற்சமயம் நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆட்சியை நகர்த்திச் செல்லும் ஐக்கிய தேசிய முன்னணி எதிர்காலத்திலும் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியது உறுதியாகிவிட்டது.

அதேநேரம், இதனை எதிர் கொள்வதற்கு அரசாங்கமும் தயாராகி வருகிறது.

இதன் முதலாவது கட்டமே, சமா தானம் தொடர்பாக ஆளுங் கட்சி உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்பட ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வாகும். இதனைத் தொடர்ந்து சமாதானம் மற்றும் நாட்டின் பொருளாதாரம் சம்பந்தமாக நாட்டு மக்கள் மத்தியில் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெளிவான திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அதனூடாக எந்த நேரத்திலும் தேர்தல் ஒன்றுக்கான வாய்ப்பு வருமானால், அதனை எதிர்கொள்ள ஐக்கிய தேசிய முன்னணி தயாராகி வருகிறது. மறுபுறத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியும் - மக்கள் விடுதலை முன்னணி கூட்டணியும், தமது தேர்தல் நகர்வுகளை மேற்கொள்ளவிருக்கின்றன.

இதற்கு இடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவை தமது எதிர்கால நிலைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். ○

---

# இயேசுவின் திருமுழுக்கு

## ஞாயிறு நற்சிந்தனை

**நாம்** இன்று இயேசுவின் திருமுழுக்கை நினைவு கூருகின்றோம். ஞாயிறு தினமாகிய இந்நாளிலே திரு வழிபாட்டுக்குரிய 3 வாசகங்களும் திருமுழுக்கையே பின்னணியாகக கொண்டுள்ளன். திருமுழுக்கு ஒரு உள்ளார்ந்த புதுப்பிறப்பின் வெளியடையாளச் செயல் ஆகும். இது ஆண்டவரின் புதுப்பிறப்பாய் உருவாகுதலைக் குறிக்கின்றது. உள்ளார்ந்த விசுவாசம், மனமாற்றம் என்பன வெளியடையாளமாகிய நீர் பொழியப்படுதலினால் உறுதிப்படுத்தப்படுகிறது. இறையருள் இயல்பிலேயே மனிதர் அனைவருக்குமான ஒரு பொது அழைப்பு. இதை யாவரும் இனாமாகப் பெற அழைக்கப்பட்டுள்ளனர். இவ் இறையருளுக்கான வடிகால்போல திருமுழுககாகிய அருளடையாளம் துலங்குகின்றது. "தாகமாய் இருப்பவர்களே நீங்கள் அனைவரும் நீர் நிலைக்கு வாருங்கள் கையில் பணமில்லாதவர்களே நீங்களும் வாருங்கள்..." (எசா55:1)

இறையருள் அற்ற வாழ்வு நிறைவற்றது, இறையருளே வாழ்வின் ஊற்று. இறைவார்த்தையை உள்ளத்தாலே செவிமடுப்பதால் ஏற்படும் நம்பிக்கை, மனமாற்றம் என்பன இறையருளோடு கூடிய வாழ்வின் ஊற்றாகின்றன. "எனக்குச் செவி கொடுங்கள், என்னிடம் வாருங்கள் கேளுங்கள் அப்பொழுது நீங்கள் வாழ்வடைவீகள்" (எசா55:39) அனைவரும் தம்மை அடைய வேண்டும் என்பதே இறைவன் விருப்பம். அவர் பாவிகளுக்கு இரக்கம் காட்டுவார், மன்னிப்பதில் அவர் தாராளமனத்தினர்.

இயேசு மீட்பர் என்று அவரில் நம்பிக்கை வைப்பவரே இறைவனில் புதுப்பிறப்படையும் திருமுழுக்கிற்குத் தகுதியுடையோர் ஆகின்றனர் எனத் தூய யோவான் (1 யோவான் 5:1) இல் குறிப்பிடுகின்றார்.



மனமாற்றமும் திருமுழுக்கினால் வெளிப்படுத்தப்படுகின்றன. இயேசுவே மீட்பின் திருமுழுக்கை ஏற்படுத்தினார். இத்திருமுழுக்கின் மூலம் நாம் கிறிஸ்துவின் மீட்பில் உடன் பங்காளிகளாகின்றோம். ◆

---

# தரம் 1 இல் மாணவர் அனுமதி 20 வருடத்தில் உச்சநிலை

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்குப் பகுதியில் கடந்த இருபது வருடங்களில் மிக அதிகளவாக இவ்வருடம் தரம் 1இல் மாணவர்கள் வகுப்புக்களில் சேர்ந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த 9 ஆம், 10 ஆம் திகதிகளில் மட்டும் வட - கிழக்குப் பகுதிகளில் 70 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். யுத்தம், வறுமை, இடப்பெயர்வு போன்ற காரணங்களால் கடந்த காலங்களில் பாடசாலைகளில் சேரும் மாணவர்கள் தொகை குறைந்திருந்தது.

# வைரஸ் காய்ச்சல் பரவத் தொடங்கியபோதே இனங்கண்டிருந்தால் பாதிப்பு குறைந்திருக்கும்

*கேள்வி:-* வேகமாகப் பரவிவரும் வைரஸ் காய்ச்சலுக்கான காரணம் என்ன?

*பதில்:-* கடந்த 2,3 மாதங்களாக யாழ்ப்பாணத்திலே காய்ச்சல் கூடிக் கொண்டுதான் இருக்கிறது. சாதாரணமாக மழைகாலங்களில் கூடுதலாக இருப்பது வழமை. ஆனால் இப்போதுள்ள பிரச்சினை என்னவென்றால், கடந்த காலங்களைவிட இறப்புககள் கூடுதலாக இருக்கிறது.

காய்ச்சலினாலும் காய்ச்சலோடு சம்பந்தப்பட்ட நோய்கள் என்ற வகையிலும் கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் கிட்டத்தட்ட 25 பேர் வரையில் இறந்துள்ளார்கள். காய்ச்சல் வந்தால் சாதாரணமாக மாறுவதுதான். ஆனால், இறப்புக்கள் அதிகரித்தமைக்கு வேறு ஏதாவது பாரதூரமான நோயினால் இந்தக் காயச்சல் ஏற்பட்டதா என ஆராய்கின்றோம்.

நாங்கள் பார்த்தளவில் கணிசமான நோயாளிகள் நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னொரு வீதத்தினர் வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வைரஸ் கிருமியினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் எந்த வைரஸ் என்று கண்டுபிடிப்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது. வைரஸ் என்று நிச்சயமாகக் கூறுவதற்கு ஆய்வுகூடங்களில் இருந்து சில தகவல்களைப் பெற்றே கூற வேண்டும்.

ஆய்வு கூட வசதிகள் யாழ்ப்பாணத்தில் இல்லை. ஆகையினால் நிச்சயமாக இது என்னவென்று சொல்ல முடியாது. டெங்கு என்று சொல்லலாம் அல்லது தொற்றுகின்ற வைரஸ் ஆக இருக்கலாம்.

வைரஸ் கிருமி ஒருவரிலிருந்து மற்றவருக்குத் தொற்றலாம். ஏனெனில் தடுப்பு நடவடிக்கை எடுக்காத போதுதான் இந்தப் பிரச்சினை தோன்றுகிறது. நெருப்புக் காய்ச்சலும் இங்கு கூடுதலாக இருக்கிறது.

நுளம்பு மூலமாகப் பரவுகின்ற சில வைரஸ் கிருமிகள், நேரடியாகப் பரவுகின்ற சில வைரஸ் கிருமிகள், இவ்வாறாகப் பரவுகின்ற காய்ச்சலைப் பெரும்பாலும் குறைப்பதற்காக - உணவு மூலம் பரவுகின்ற நெருப்புக் காய்ச்சலைத் தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று நுளம்பு மூலம் பரவுகின்ற நோய்களை- டெங்கு, மலேரியா போன்றவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். இவை மூன்று வழியாக மேற்கொள்ளப்படலாம். உணவு மூலம், நுளம்பு மூலம், நேரடித் தொடர்பு ஆகியன மூலம் பரவுவதைத் தடுத்தல் வேண்டும்.

இந்த நிலையில் இங்குள்ள வைத்தியசாலைகளில் போதிய வசதிக்ள் இல்லாத காரணத்தால் மக்கள் கூடியளவு நோய்த்தடுப்பில் ஈடுபடவேண்டும். முதலாவதாக சமைக்கும் போதும், உணவு பரிமாறும் போதும் சவர்க்காரம் போட்டு கைகளைக் கழுவுவதன் மூலம் பெரும்பாலான நோய்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அத்துடன் நாங்கள் வெளியில் உணவுகளைச் சாப்பிடுவதைக் கூடியளவில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கடைகளில் சுகாதாரம் பேணப்படுவது தொடர்பாக பொது சுகாதார பரிசோதகர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*கேள்வி:-* யாழ்ப்பாணத்தில் ஏ -9 பாதை திறக்கப்பட்ட பின்னர்தான் இந்த நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது என்பது பற்றி..?



Dr.சிவராஜா
தலைவர்
சமூக மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

*பதில்:-* ஏ-9 பாதை திறந்துள்ளதால் சில பிரச்சினைகள் ஏற்பட்டன. டெங்கு நோயாளி இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், டெங்கு நோயைப் பரப்புகின்ற நுளம்பு இங்கு இருககிறது. அதே நேரத்தில் டெங்கு நோயாளி இல்லாதுவிட்டால் நுளம்புக்கடி இருந்தாலும் நோய் பரவாது. ஆனால், யாராவது ஒரு டெங்கு நோயாளி வந்தால் அவரைக் கடிக்கும் நுளம்பால் பல பேருக்கு அதைப் பரப்பும். இது ஒரு காரணியாக இருக்கலாம். ஆனால், அதனால் தான் டெங்கு பரவுகின்றது என்று முழுமையாகச் சொல்ல முடியாது.

*கேள்வி:-* வைரஸ் நோயைக் கட்டுப்படுத்தப் போதியளவு மருத்துவ வசதிகள் இல்லை என்று கூறப்படுகிறது. அதைப்பற்றி..?

*பதில்:-* முதலாவது, வைரசை அடையாளம் காணவேண்டும் ஏராளமான வைரஸ் இருக்கிறது. இந்த ஏராளமான வைரசுக்கும் நாங்கள் தடுப்பு மருந்து போட முடியாது. நாங்கள் காலையிலிருந்து மாலை வரை தடுப்பு மருந்தே போட்டுக் கொண்டிருக்கிறோம்.

இதில் நெருப்புக்காய்ச்சலுக்காக வாய்மூலம் கொடுக்கப்படுகின்ற தடுப்பு மருந்து 5 நாட்களுக்குத் தொடர்ச்சியாக கொடுக்கப்பட வேண்டும். அந்த மருந்தின் விலை 1500 ரூபா. ஆனால் இதை எல்லோராலும் வாங்கிப் பாவிக்கக் கூடிய வசதி வரும் என்று கூறமுடியாது. ஆனால் இது பாவித்தால் 3,4 வருடங்களுக்கு நோய் வராது.

சாதாரண கிராமப்புறச் சூழலில் உள்ளவர்கள்தான் கூடுதலாக இந்த நோயின் தாக்கத்திற்கு அதிகம் உள்ளாகுகின்றார்கள். ஏனெனில் அவர்கள் தடுப்பு மருந்துகளைப் பாவித்து தங்களைத் தாங்கள் பாதுகாத்துக் கொள்வதில்லை.

அரசாங்கத்தால் இந்தத் தடுப்பு மருந்துகளை வழங்குவதென்றால் நிறையச் செலவாகும். ஆனால் இன்றைய நிலையில் அரசாங்கத்தால ஒரு நபருக்கு 1500 ரூபா வீதம செலவழித்து அதனை மேற்கொள்வது பெரிய செலவல்ல.

*கேள்வி:-* குடாநாட்டில் திடீரென நோய் வேகமாகக் கட்டுப்படுத்த முடியாதளவுக்குப் பரவியதற்கு என்ன காரணம்..?

*பதில்:-* நோய் தொடங்கிய ஆரம்பத்திலேயே அது தொடர்பான ஆராய்வுகளை மேற்கொண்டிருக்க வேண்டும். அதன் மூலமாக குறிப்பிட்ட வயதினரைத்தான் தாக்குகிறது என இனங்காணலாம்.

இதற்காக இரத்தம் கொழும்புக்குப் பரிசோதனைக்காகக் கொண்டு சொல்லப்பட்டிருந்தாலும், நான்கு பகங்களிலும் நோயின் ஆரம்பத்திலேயே சரியான நடவடிக்கைகள் எடுத்திருந்தால் - அதாவது, அது தொடர்பான அறிவித்தல்களை விடுத்திருந்தால் இதைக் கட்டுப்படுத்தியிருக்கலாம்.

ஆனால், இங்கு உயிரிழப்பு வேகம் அதிகரித்த பின்னர்தான் வேகம் காட்டுகிறார்கள். கடந்த மாதம் மட்டும் காய்ச்சலுக்காக 1000 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார்கள். மழைக்காலத்தில்தான் இதன் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டது. தற்போது ஓரளவு குறைந்து விட்டது.

நுளம்பால் பரவுகின்ற நோயை நாங்களே கட்டுப்படுத்த வேண்டும். செடிகளை வளரவிடாது தடுத்தல். வீட்டின் ஜன்னல்களை மூடிவிட்டு வீட்டுக்குள் நுளம்பு வருவதைத் தடுக்க வேண்டும். சின்னச் சின்ன நீர்த்தேக்கங்கள், பற்றைகள் ஆகியவற்றிற்குள்தான் இவை தங்கும்.

டெங்கு காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு மாலை 4-7 மணிக்குள் தான் கடிக்கும். அந்த நேரங்களில் வெளியில் இருப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். காலையில் 5-7 மணிக்கு இடையிலும் இது கடிக்கும். அந்த நேரங்களில் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

*சந்திப்பு:*
**கணேஷ், லிவிங்ஸ்டன்**

---

# இலட்சியத்துடன் வாழுங்கள் அதுவே உயரிய வாழ்வு தரும்

சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தினம் ஜனவரி 12 ம்திகதி ஆகும். அத்தினம் நாடு முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. மகானுடைய இந்த ஜெயந்தி தினத்தையொட்டி ஒரு வாரகாலத்திற்கு ஆன்மீக எழுச்சி வாரத்தை அனுஷ்டிக்குமாறு யாழ். குடாநாட்டு மக்களை ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர் குழுவினர் கேட்டிருக்கிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் ஒவ்வொரு இளைஞனுக்கும் மிகவும் அவசியம் தேவைப்படுகின்றன. அவர் காட்டிய நெறியில் வாழ நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டிய தேவை எமக்கு அவசியமாகின்றது. இன்றைய இளைஞர்களிடத்திலே தெய்வ பக்தியும், தேச பக்தியும் வேண்டும். பறவைக்கு இரண்டு சிறகுகள் போல வண்டிக்கு இரண்டு சக்கரங்கள் போல தேசம் வீறுடன் விளங்க தெய்வபக்தியும் தேசபக்தியும் மிக மிக அவசியமாகின்றது. அதனையே சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தியுள்ளார். தேசமுன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தை கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள், பெயருக்காகவோ புகழுக்காகவோ அவை போன்ற பொருளற்ற வேறு எந்த அற்ப விடயத்துக்காகவோ திரும்பிப் பார்க்க நில்லாதீர்கள்! சுயநலம் என்பதை அறவே தூர எறிந்து விட்டு வேலை செய்யுங்கள், உங்கள் அனைவர் மீதும் ஆண்டவனின் ஆசிகள் பொழியும் என இளைஞர்களுக்கு சுவாமி விவேகானந்தர் ஆன்மீக எழுச்சி அறைகூவலை விடுத்திருக்கின்றார்.

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் அவர் நமக்கு விட்டுச் சென்ற செய்தியும் மட்டுமே எங்கள் இளைஞர்களுக்குப் புதிய வழியையும் ஒளியையும் காட்டமுடியும் என்பதை அனைவரும் உணர்ந்து அவ்வழியில் வாழ விரும்ப வேண்டும்.



இன்றைய இளைஞர்களிடத்தில் தெய்வீக பக்தி, தேசபக்தி மொழிப்பற்று, கடமையுணர்வு, தன்னம்பிக்கை, ஒழுக்கம் போன்ற சிறந்த விழுமியத்தன்மைகள் குறைந்து காணப்படுகின்றன. இதனால் இனமத பூசல்களும் விரோதச் செயல்களும் மலிந்து கொண்டிருக்கின்றன. இவற்றினைக் கண்ட விவேகானந்தர் சொல்லுகின்றார்

நாட்டின் பொன்னான எதிர்காலமே உங்களைத் தான் சார்ந்திருக்கின்றது. நாட்டின் வருங்கால நம்பிக்கைகள் உங்களையே எதிர் நோக்கியுள்ளன. எனவே, செயலற்று வாழ்க்கையை வீணாகக் கழித்துக் கொண்டிருக்கின்ற உங்களைப் பார்க்கும் போது என் மனம் சொல்ல முடியாத வேதனைப்படுகின்றது. உடல் பலவீனத்தையோ மனப் பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் நீங்கள் அணுகக் கூடாது என்பதை நான் உங்களுக்குப் போதிக்க விரும்பும் முதன்மையான உபதேசம் ஆகும்.

துரதிஷ்டவசமாக இந்த வாழ்க்கையில் மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் எந்த விதமான ஓர் உயர்ந்த இலட்சியமும் இல்லாமல் இருள் அடைந்த இந்த வாழ்க்கையில் தட்டித் தடுமாறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த இலட்சியமுள்ள ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால் இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். எனவே உயர்ந்த ஓர் இலட்சியத்தை கொண்டிருப்பது மேலானது.

இவ்வாறாக சுவாமிகள் தனது ஆன்மீக எழுச்சிக் கருத்துக்களைத் தந்து மனித நேயத்தை மாணபான சிந்தனைகளை ஒவ்வொரு மனிதனிடத்திலும் வளர்த்துச் செல்வதற்கு அரும்பாடுபட்டுள்ளார். அவரது அளப்பரிய தியாகத்தை சீரிய கருத்துக்களை சிறந்த நெறிகளை இன்றைய மனித சமுதாயம் அவசியம் கற்க வேண்டியது- கற்றாங்கொழுக வேண்டியதும் தலையாய கடமையாகும். எனவே நாம் அனைவரும் ஒன்றாவோம் எங்கள் வீடுகளிலும், பள்ளித் தலங்களிலும், நாம் கடமைபுரியும் பணிமனைகளிலும் சுவாமி விவேகானந்தரின் சீரிய சிந்தனைகளை நெறிப்படுத்துவோம். ✦

**விவேகானந்தர் ஆன்மீக எழுச்சி வாரம்**
**• இன்று ஆரம்பமாகின்றது**

—— **கவிமாமணி**

---

# சின்னஞ் சிறு செய்திகள்

## குடிநீர் மாதிரிகள் கொழும்புக்கு

யாழ். குடாநாட்டில் சிகிச்சைக்கு கட்டுப்படாத வைரஸ் காய்ச்சல் பரவியதையடுத்து, யாழ். போதனா வைத்தியசாலை குடிநீர் கிணறுகள், உணவு தயாரிக்கும் நிலையஙகள் மற்றும் குளிர்களி நிலையங்களில் இருந்து குடிநீர் மாதிரிகள் பெறப்பட்டு கொழும்பு மருத்துவ ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (100)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு ரூ.300 கோடி

வடக்கு-கிழக்கில் உள்ள இடம பெயர்ந்த மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த 300 கோடி ரூபா செலவிடப்படும். உலக வங்கி ஏற்கனவே இந்த நிதியை வழங்கியுள்ளது. சுகாதாரம், நீர், கட்டடம் போன்றவற்றுக்கும் இடம் பெயர்ந்த மக்களின் வேலை வாய்ப்புக்காகவும் இந்த நிதி செலவிடப்படுகின்றது.

## சூரிய சக்திமூலம் மின் வழங்க நடவடிக்கை

வடக்கு-கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களில் மின்சார வசதியற்ற எட்டு கிராமங்களுக்கு சூரிய சக்தி மூலம் மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, சூரிய சக்தி கைத்தொழில் கூட்டுத்தாபனத் தலைவர் பிரதீப் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சூரிய சக்திக் கூட்டுத்தாபனமும் மின் சக்தி அமைச்சும் இந்தக் கிராமங்களை தெரிவு செய்துள்ளன.

இதற்கான நிதியை தந்துதவுமாறு உலகவங்கியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாகவும், நிதி வந்தவுடன் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் சூரிய சக்தி கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## 30 ராஜதந்திரிகள் கிழக்கிற்கு செல்வர்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் அழிவுண்ட பாதிப்புக்களை கண்டறிவதற்கு சுமார் 30 வெளிநாடுகளின் ராஜதந்திரிகள் கிழக்குக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

யுத்தத்தினால் அழிந்த பிரதேசங்களை மீளக்கட்டி எழுப்புவது தொடர்பான தகவல்களைத் திரட்டுவதே, இவர்களின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் திங்கட்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்யும் இந்த வெளிநாட்டு ராஜதந்திரிகள் அரசாங்க, மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்துக் கொள்வதோடு, சமயத்தலைவர்களையும் சந்தித்து உரையாடவுள்ளனர்.

## யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி திட்டம் விரிவாக்கம்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தித் திட்டம் யாழ். மாவட்டத்தில் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விடயம் தொடர்பாக கொழும்பில் விசேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலிருந்து சென்ற இத்திட்டத்துக்கான உதவி ஆணையாளரும் கலந்து கொண்டார்.

ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் இத்திட்டத்துக்காக சமுர்த்திச் சிறு குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மிகவிரைவில் சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடும் ஆரம்பிக்கவுள்ளன.

இதற்காக, யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சமுர்த்தி வங்கிகள் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

(க)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அவசர புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கை
# துரிதமாகத் திட்டங்களை தயாரிக்கும் சிறான்

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கில் செயற்படுத்தப் படவிருக்கும் அவரசர மனிதாபிமான, புனர்வாழ்வு செயற்திட்டங்கள் துரிதமாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இச் செயற்திட்டங்களை அடையாளம் காணுவதிலும், சாத்தியமான செயற்திட்டங்களை வரைவு செய்வதிலும்- கிளிநொச்சியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு இயங்கும் "சிறான்" அலுவலகம் ஈடுபட்டு வருகிறது.

ஏற்கனவே, ஒரு சில செயற் திட்டங்கள் வரைவு செய்யப்பட்டு அவற்றுக்கு முழுமையான வடிவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த வாரம் கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான உபகுழுக் கூட்டத்தில்- ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சில செயந்திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்படவிருப்பதாக சிறான் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (க)

## கொழும்பை வியப்பில் ஆழ்த்திய தமிழ்ச்செல்வனின் வாழ்த்து அட்டை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனிடமிருந்து - புதுவருட தினத்தையொட்டி கொழும்பிலுள்ள ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட வாழ்த்து அட்டைகள் அந்த ஊடக நிறுவனங்களுக்கு பெரும் வியப்பைத் தந்ததாம்.

அரச தொலைகாட்சியான ரூபவாஹினிக்கும் இவ்வாறான வாழ்த்து கிடைத்ததாகவும்,

வாழ்த்து அட்டை ஒன்றைப் பெற்றுக் கொண்ட கொழும்பிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கில வாரஇதழொன்றின் ஆசிரியர்- இது தனக்குத்தான் வந்ததா? எனப் பலரிடமும் கேட்டு உறுதிப் படுத்திக் கொண்டதாகவும் தெரியவருகின்றது.

## பொலிசாரை மகிழ்ச்சியாக்கிய தமிழ் அரசியல் கட்சியினர்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் கடந்த புதுவருட தினம் மிகவும் கலகலப்பாக கழிந்தது. அங்கு கடமையாற்றும் அனேகமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் அன்றையதினம் வழமைக்கு மாறாக சுறுசுறுப்பாகக் காணப்பட்டனர். அனைவரது முகங்களிலும் மப்பும் மந்தாரமும் சூழ்ந்திந்தது. ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் அன்று காலையே மதுபானப் போத்தல்கள் தாராளமாக விநியோகிக்கப்பட்டமையே மேற்படி நிலைமை உருவானத்திற்கு காரணம். இவற்றை இலவசமாகவே வாசல்வரை வந்து விநியோகம் செய்தவர்கள் வேறு யாருமல்லர். முன்னர், ஆயுதம் ஏந்தி, பின்னர் அரசியல் பணியில் இறங்கிய ஒரு தமிழ்க் கட்சியைச் சேர்ந்தவர்களே இச்சேவையைச் செய்தவர்களாம்.

# சவுக்கு மரங்களை அழிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் !

## வடமராட்சி கடற்புலிகளின் அரசியற்பொறுப்பாளர் எச்சரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

மணற்காடு, குடத்தனை, வல்லிபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள சவுக்கு மரத்தோப்புக்களுக்குள் அனுமதியின்றி எவரும் செல்லவேண்டாமென வடமராட்சி கடற்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக் காலங்களாக சவுக்குமரங்கள் விறகுக்காக வெட்டப்படுவது குறைந்திருந்தது. இப்போது மீண்டும் அத்துமீறி மரங்களை வெட்டி, விறகுகள் பருத்தித்துறை, நெல்லியடியில் விற்க்கப்படுகின்றன.

இதனால், சவுக்கம் காடுகள் அழிந்துபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. சவுக்க மரத்தை அழிப்பதனால் சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தல், ஏற்படுவதுடன் மணல் அரிப்புக்கும் ஏதுவாக அமைகின்றது.

ஆகவே- இப்பிரதேசங்களின் சவுக்கம் காட்டிற்குள் எவரும் அனுமதி இன்றி நுழையக் கூடாது எனவும், அப்படி அத்துமீறி நுழைவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் வடமராட்சி கடற்புலிகளின் அரசியற்பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (17)

## மதிப்பீடுகளின் பின்னரே மீளக்குடியமர்வு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான பணக் கொடுப்பனவு வழங்கப்படுவது மேலும் தாமதமடையவுள்ளது.

கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர், குடாநாட்டில் மீளக்குடியமர்ந்தவர்களுக்குரிய பதினையாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் விடயத்தில், மேலதிகமாக புதிய நடைமுறைகள் பின்பற்றப் படவுள்ளது. இதனால் இக்கொடுப்பனவு வழங்கப்படுவது உடனடியாக சாத்தியம் இல்லை.

மேற்படி கொடுப்பனவு வழங்கப் படுவதற்கு முன்னர், பொது மக்கள் மத்தியில் தேவை மதிப்பீடு செய்யப்படவிருக்கிறது. இதற்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் விசேட படிவம் வழங்கப்படவுள்ளது. இப்படிவம் பூர்த்தி செய்யப பட்டு, குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில், தேவை மதிப்பீடு தயாரிக்கப்பட இருக்கிறது. இம் மதிப்பீட்டின் அடிப்படையில் பணக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேற்படி தேவை மதிப்பீடு இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. இம்மதிப்பீட்டுக்கான ஆரம்ப ஏற்பாடு மட்டுமே தற்போது மேற்கொளளப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படுவது உடனடியாக சாத்தியம் அற்றதாகவே உள்ளது. (க)

# சாரதி அனுமதிப்பத்திர பரீட்சை பெப்ரவரி மாதம் வரை நீடிப்பு

(பண்டத்தரிப்பு)

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான எழுத்துப் பரீட்சை நடைபெறும் திகதிகள் பெப்ரவரி மாதமவரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள பாட்சைகளுக்கான திகதி எதிர் வரும் 21ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளதாகவும்,

தற்போது விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்போர்- மார்ச் மாதப் பாட்சைகளிலேயே தோற்ற முடியும எனவும் யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# பழுதடைந்த உணவுப் பொருள் விற்போர் மீது சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பழுதடைந்த, விற்பனைத் திகதி முடிவடைந்த பொருட்களை விற்கும் நிலையங்கள் மீதும், சுகாதாரச் சீர்கேடான உணவகங்கள் மீதும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, யாழ்.மாநகர சபையின் சுகாதார சேவைச் செயலாளர் இ.இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

அண்மைக்காலமாகப் பரவி வரும் நோய்களிற்கு தரங்கெட்ட உணவுப் பண்டங்களை வாங்கி உண்பதும் ஓர் காரணமாகும். இதனால் வயிற்றோட்டம், கொலரா போன்ற நோய்கள் ஏற்படுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரா)

### தமிழக...

மர்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன அமைச்சரவைக்கு மனு ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

இதை அமைச்சரவை அங்கீகரித்து விட்டதாக அமைச் சர் ஜெயலத் ஜெயவர்த்தனா தெரிவித்தார். (க)

### ஒலரா...

திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோவுடன் அவர் யாழ்ப்பாணம் வருவார் எனவும் தெரியவருகிறது.

### மனித எலும்பு ...

இதனை அடுத்து, அங்கு வெளிவந்த எலும்புத்துண்டங்கள் வைத்தியசாலை இயங்கியவேளை புதைக்கப்பட்ட சடலங்களின் எச்சங்களாக இருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

குழி அகழப்பட்ட வேளை வெளியே காணப்பட்ட சில எலும்புத்துண்டங்கள் எடுத்துவரப்பட்டு, கொழும்பு மருத்துவக்கல்லூரியிலுள்ள சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இவை எந்தகாலப்பகுதிக்கு உரியவை என இனங்காண்பதற்காகவே அனுப்பி வைக்கப்படடுள்ளன. (ச,111)

### புலிகளுடன்...

சிறுமிகளும், சுயவிருப்பின் பேரில் வீடு செல்ல விரும்பிய இருவரும் அவர்களின் பெற்றோர் களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி சந்திரசேகர,

போர்நிறுத்தக் கண்காணிப்புகுழுவின் பிரதிநிதி சென்டர், யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி றொசான் மக்ஜவே, யுனிசெப் பிரதிநிதி செலின் லாக்கபேற் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (லி)


## வாசகர்களே, வாடிக்கையாளர்களே

நமது ஈழநாட்டில் விளம்பர செய்வதற்கு
உங்களுக்கு அருகிலேயே
இனி எமது விளம்பர முகவர்!

### நமது ஈழநாடு விளம்பர முகவர்




இ.சுதாகரன்
சிவகஜன் தொலைத் தொடர்பு நிலையம்,
சந்தை வீதி, கொடிகாமம்.



தொலைபேசி இல. 070-213158
0777-273607
தொலைநகல் இல..070- 213158


## காணாமற் போன படையினர் விவகாரம்
# ஜனாதிபதிக்கு எதிராக உணர்வலை; பாலாவின் அறிவிப்பு ஏற்படுத்துகிறது!

(கொழும்பு)

கடந்த யுத்த காலத்தில் பலியான படையினரின் உடல்களைப் பொறுப்பேற்காமல் - அவர்களைச் சண்டையில் காணாமற் போனவவர்களாக அறிவித்து வந்த விடயத்தை, தாய்லாந்துப் பேச்சுக்களில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிவித்துள்ளமையானது- தெற்கில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கும், முக்கிய இராணுவ தளபதிகளுக்கும் எதிராக தெற்கின் உணர்வலைகளைத் தூண்டியிருப்பதாக 'சண்டே லீடர்' கருத்து வெளியிட்டுள்ளது.

இவ்விடயம் - பேச்சுக்களில் தெரிவிக்கப்பட்டபோது, அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகளே மிகுந்த சிரமத்துடன் அதனை எதிர்கொண்டு உள்வாங்கியதாகவும் 'சண்டே லீடர்' மேலும் தெரிவித்துள்ளது.

தென்னிலங்கையில் இயங்கும் காணாமற்போன படைவீரர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் சங்கம் -

இவ்விடயத்தை விரைவில் ஜனாதிபதிக்கும், முனனாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கும் எதிராக முன்கொண்டு செல்லுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் -

நாளை மறுதினம் நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுக்கள் பற்றிய நாடாளுமன்ற விவாதத்தில் இந்த விவகாரம் முக்கிய பிரச்சினையாக எடுக்கப்படலாம் எனவும் 'சண்டே லீடர்' குறிப்பிட்டுள்ளது.

### குடாநாட்டு....

மத்தியில் விழிப்புணர் வின்மை போன்ற காரணங்களால் நோய்க் கிருமிகள் பெருக்கமடைந்து வருகின்றன.

அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் போதிய அடிப்படை வசதிகள் கிடையாது. இங்கு நிலைமைகளைச் சமாளிக்கத் தேவையான வைத்திய நிபுணர்களும் இல்லை.

இதனாலேயே கடந்த ஒரு மாதத்தில் மட்டும் வைரஸ் காய்ச்சல், டெங்கு, கொலரா போன்ற நோய்களால் 30 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

### வைரஸ்....

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொன்னுத்துரை சத்தியானந்தன் (வயது 59), மானிப்பாயைச் சேர்ந்த வல்லிபுரம் வேலாயுதம் (வயது 70) ஆகிய இருவருமே நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டு நேற்றைய தினம் வைத்தியசாலையில் மரணமானவர்களாவர். (111)

### குடியேற்..

கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்களது பணி-

அடுத்த மாதம் 7ம் திகதிக்கு முன் முடிவுறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (க)

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.